விலை ரூபா: 10.00

*Registered as a Newspaper in Srilanka*

# வலம்புரி

Valampurii

பக்கங்கள்: எட்டு

சங்கு 08 வள்ளுவர் ஆண்டு 2038 கார்த்திகை 08 சனிக்கிழமை (24.11.2007) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 340

SATS TECH
யாழ்.நகரின் முன்னணி
Satellite & Cable TV நிறுவனம்
DIAL 021 222 5908

## பொதுநலவாய அமைப்பில் இருந்து பாகிஸ்தான் நீக்கம்; இல. எதிர்ப்பு

(கொழும்பு)

பொதுநலவாய (கொமன்வெல்த்) அமைப்பிலிருந்து பாகிஸ்தான் நீக்கப்பட்டமைக்கு இலங்கை எதிர்ப்புத் தெரிவித்துள்ளது. இலங்கை அமைச்சரவை நேற்று முற்பகல் 11.30 மணிக்குக் கூடியது.

இக் கூட்டத்தில் பொதுநலவாய அமைப்பிலிருந்து பாகிஸ்தானை நீக்கியதற்கு எதிராகத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. பொதுநலவாய அமைப்பிலிருந்து பாகிஸ்தானை நீக்கும் முடிவு நேற்று முன்தினம் வியாழக்கிழமை உகண்டாவில் அறிவிக்கப்பட்டது.

அந்த அறிவிப்பு வெளியிடப்பட்ட ஊடகவியலாளர்கள் (08 ஆம் பக்கம் பார்க்க)

## யுனிசெவ்வின் சர்வதேசப் பணியாளரை வெளியேற்ற அரசாங்கம் வலியுறுத்தல்

(கொழும்பு)

ஐக்கிய நாடுகள் சபையின் சிறார் அமைப்பான யுனிசெவ்வின் சர்வதேசப் பணியாளரை நாட்டை விட்டு வெளியேறுமாறும் சில உள்நாட்டுப் பணியாளர்களை பணி நீக்கம் செய்யுமாறும் அரசாங்கம் வலியுறுத்தியுள்ளது.

இது தொடர்பில் வெளிவிவகார அமைச்சு நேற்று வெளியிட்டுள்ள அறிக்கை வருமாறு,

கொழும்பில் அண்மையில் நடைபெற்ற ஆர்ப்பாட்டம் ஒன்றில் யுனிசெவ் அமைப்பின் அனைத்துலகப் பணியாளர் மற்றும் பணியாளர்கள் கலந்து கொண்டது குறித்து ஆழ்ந்த வருத்தத்தை யுனிசெவ் அமைப்பின் வதிவிடப் பிரதிநிதியை நேரில் (08 ஆம் பக்கம் பார்க்க)

# தமிழ்க் கூட்டமைப்பு எம்.பிக்கள் அரசினால் கடத்தப்படும் அபாயம்

## சர்வதேசத்தைத் தலையிட வலியுறுத்தல்

(கொழும்பு)

ஆளும் மகிந்த ராஜபக்ஷ அரசாங்கத்தினால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் கடத்தப்படும் அபாய நிலை உள்ளதால் இது தொடர்பில் அனைத்துலக சமூகம் தலையிட வேண்டும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் வலியுறுத்தியுள்ளனர். நாடாளுமன்ற கட்டடத் தொகுதியில் நேற்று நடத்தப்பட்ட ஊடகவியலாளர் மாநாட்டில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழுத் தலைவரும் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான இரா.சம்பந்தன் இதனைத் தெரிவித்துள்ளார். (08 ஆம் பக்கம் பார்க்க)



## பேசாலைக் கடற்பரப்பில் மோதல்

(கிளிநொச்சி)

மன்னார் பேசாலைக் கடற்பரப்பில் தமிழீழ விடுதலைப்புலிகளின் நிர்வாகப் பகுதிகளை நோக்கி கடற்படையினர் மேற்கொண்ட முன்நகர்வுத் தாக்குதல் நடவடிக்கையை கடற்புலிகள் முறியடித்துள்ளனர் என விடுதலைப்புலிகள் அறிவித்துள்ளனர்.

...கள் பலியானதாகவும் 7 படகுகள் சேதமடைந்ததாகவும் தேசிய பாதுகாப்புக்கான ஊடக மத்திய நிலையம் தெரிவித்துள்ளது. இத் தாக்குதல் தொடர்பில் விடுதலைப்புலிகள் தெரிவித்துள்ளதாவது,

தலைமன்னார் கடற்படைத் தளத்திலிருந்து கடற்படையினர் நேற்றுக் காலை 8.40

விடுதலைப்புலிகளின் பகுதி நோக்கிய இராணுவ நடவடிக்கைக்காக முன் நகர்ந்தன.

இதனையடுத்து அந்த அணிக்கு எதிராக கடற்புலிகள் முறியடிப்புத் தாக்குதலைத் தொடுத்தனர். முற்பகல் 9 மணிவரை நடைபெற்ற முறியடிப்புத் தாக்குதலில் கடற்படையினரின் நீருந்து விசைப்படகுகள் சேதமாகு

## பேசாலை மக்கள் தேவாலயத்தில் தஞ்சம்

(மன்னார்)

பேசாலையில் நேற்று இடம்பெற்ற மோதலையடுத்து அப்பகுதியில் படையினர் தீவிர தேடுதல் நடவடிக்கை மேற்கொண்டு வருவதால் அப் பகுதி மக்கள் பேசாலை தேவாலயத்தில் அடைக்கலம் புகுந்துள்ளனர்.

பேசாலை வெற்றிமாதா தேவாலயத்தில் 400க்கும் அதிகமாக மக்கள் தஞ்சமடைந்திருப்பதாக அந்தத் தேவாலயத்தின் பங்குத்

(கிளிநொச்சி)

மன்னார் பேசாலைக் கடற்பரப்பில் தமிழீழ விடுதலைப்புலிகளின் நிர்வாகப் பகுதிகளை நோக்கி கடற்படையினர் மேற்கொண்ட முன்நகர்வுத் தாக்குதல் நடவடிக்கையை கடற்புலிகள் முறியடித்துள்ளனர் என விடுதலைப்புலிகள் அறிவித்துள்ளனர்.

எனினும் இத் தாக்குதலில் 17 கடற்புலிகள் பலியானதாகவும் 7 படகுகள் சேதமடைந்ததாகவும் தேசிய பாதுகாப்புக்கான ஊடக மத்திய நிலையம் தெரிவித்துள்ளது. இத் தாக்குதல் தொடர்பில் விடுதலைப்புலிகள் தெரிவித்துள்ளதாவது,

தலைமன்னார் கடற்படைத் தளத்திலிருந்து கடற்படையினர் நேற்றுக் காலை 8.40 மணிக்கு ஆறு நீருந்து விசைப்படகுகளில் விடுதலைப்புலிகளின் பகுதி நோக்கிய இராணுவ நடவடிக்கைக்காக முன் நகர்ந்தன.

இதனையடுத்து அந்த அணிக்கு எதிராக கடற்புலிகள் முறியடிப்புத் தாக்குதலைத் தொடுத்தனர். முற்பகல் 9 மணிவரை நடைபெற்ற முறியடிப்புத் தாக்குதலில் கடற்படையினரின் நீருந்து விசைப்படகுகள் சேதமாக கடற்படையினர் (08 ஆம் பக்கம் பார்க்க)

பேசாலையில் நேற்று இடம்பெற்ற மோதலையடுத்து அப்பகுதியில் படையினர் தீவிர தேடுதல் நடவடிக்கை மேற்கொண்டு வருவதால் அப் பகுதி மக்கள் பேசாலை தேவாலயத்தில் அடைக்கலம் புகுந்துள்ளனர்.

பேசாலை வெற்றிமாதா தேவாலயத்தில் 400க்கும் அதிகமாக மக்கள் தஞ்சமடைந்திருப்பதாக அந்தத் தேவாலயத்தின் பங்குத் தந்தை அகஸ்ரின் (08 ஆம் பக்கம் பார்க்க)

## தேசிய அரசை அமைப்பதற்கான அழைப்பை ஐ.தே.க. நிராகரித்தது

### புதிய அரசே இன்றைய தேவை எனத் தெரிவிப்பு

(கொழும்பு)

அரசாங்கத்தின் உயிர் ஊசலாடிக் கொண்டிருக்கின்றது. அதற்கு ஒட்சிசன் வழங்கி மூச்சுவிடவே தேசிய அரசாங்கம் அமைக்கும் யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது.

மூச்சு விடும் நிலை வந்ததும் மீண்டும் சர்வாதிகாரப் போக்கே தலைதூக்கும். மக்கள் தொடர்ந்தும் அடக்கி ஆளப்படுவர். எனவே புதிய ஆட்சியே இன்றைய தேவையாகும் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ரவி கருணாநாயக்க தெரிவித்தார்.

தேசிய அரசாங்கம் அமைப்பது தொடர்பான கதையை (08 ஆம் பக்கம் பார்க்க)

## வீதிகளில் கார்த்திகைத் தீபம் ஏற்ற இராணுவம் அனுமதியளிப்பு

(யாழ்ப்பாணம்)

கார்த்திகைத் தீபத்தினை இன்று வீடுகளுக்கு முன்னால் ஏற்றுவதற்கு படையினர் அனுமதி வழங்கியுள்ளதாக ஈ.பி.டி.பி. அறிவித்துள்ளது.

விடுதலைப்புலிகளின் மாவீரர் தினம் தற்போது அனுஷ்டிக்கப்பட்டு வருவதால் கார்த்திகைத் தீபத்தினமான இன்று வீதிகளில் தீபம் ஏற்றுவதற்கு படையினர் அனுமதி மறுத்துள்ளதாகப் பொதுமக்கள் தம்முடன் தொடர்பு கொண்டு முறையிட்டதையடுத்து,

தாம் யாழ். இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் சந்திரசிறியுடன் தொடர்பு கொண்டு கேட்டதற் கமைய இவ் அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக ஈ.பி.டி.பி. வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச)

## படையினரின் சூட்டில் 2 இளைஞர்கள் பலி

மூதூர் பாலத்தடிச்சேனையில் படையினரின் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி இரண்டு இளைஞர்கள் பலியாகியுள்ளனர். பாலத்தோப்பூர் இராணுவ முகாமிலிருந்து நேற்று முன்தினம் அதிகாலை 1.10 மணியளவில் ரோந்து சென்ற படையினரே இந்தத் துப்பாக்கிப் பிரயோகத்தினை மேற்கொண்டுள்ளனர்.

துப்பாக்கிப் பிரயோகத்தில் பலியானவர்கள் விடுதலைப்புலிகள் இயக்க உறுப்பினர்கள் என படையினர் தெரிவித்துள்ளனர். இந்தச் சடலங்கள் இதுவரை அடையாளம் காணப்படவில்லை. (எ-5)

## தமிழர் தாயகப் பகுதிகளில் பணிகள் தொடரும்; தமிழர் புனர்வாழ்வுக் கழகம் நேற்று அறிவிப்பு

(கிளிநொச்சி)

இலங்கை அரசாங்கம் தடை விதித்துள்ள போதும் தமிழர் தாயகப் பகுதிகளில் எவரது தலையீடுமின்றி எமது மனிதாபிமான மற்றும் மறுசீரமைப்புப் பணிகள் தொடரும் என்று தமிழர் புனர்வாழ்வுக் கழகம் அறிவித்துள்ளது.

இதுதொடர்பில் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் தலைவர் வி.சிவண்டியார் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தை இலங்கை அரசாங்கம் தடை செய்தமையை மிக வன்மையாகக் கண்டிக்கின்றோம். இத்தடை மூலம் தமிழ் மக்களுக்கான மனிதாபிமான உதவிகள் தடுக்கப்பட்டுள்ளன. அரசாங்கத்தின் இனப்பாகுபாடு மற்றும் தமிழ் மக்கள் மீதான ஒடுக்குமுறையின் தொடர்ச்சியாக தமிழர் புனர்வாழ்வுக் கழகம் மீது தடை விதிக்கப்பட்டுள்ளது.

மகிந்த ராஜபக்ஷ அரசாங்கத்தினால் விதிக்கப்பட்டுள்ள (08 ஆம் பக்கம் பார்க்க)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# நாள் ஒன்றுக்கு 5 ஆயிரத்து 700 பேர் எய்ட்ஸ் நோயினால் உயிரிழப்பு

(கொழும்பு)

எய்ட்ஸினால் ஒவ்வொருநாளும் உலகில் 5 ஆயிரத்து 700 பேர் மரணமடைந்து வருகின்றனர். அதேவேளை இதனால் 33 மில்லியன் மக்கள் உலகளாவிய ரீதியில் பாதிக்கப்பட்டுள்ளதாக ஐக்கிய நாடுகள் சபையின் புதிய அறிக்கை தெரிவிக்கின்றது.

ஆனால் கடந்த காலத்தில் இவ்வாறு பாதிக்கப்பட்டவர்களின் தொகை 40 மில்லியன் என தெரிவிக்கப்பட்டிருந்தது. தற்போதைய கணக்கெடுப்பு முறையில் ஏற்பட்டுள்ள மாற்றமும் முன்னேற்றமுமே பாதிக்கப்பட்டவர்களின் தொகையில் இவ்வாறு மாற்றமேற்பட காரணமாகும்.

முன்னர் வைத்தியசாலைகளில் இருந்து பெற்றுக் கொண்ட தரவுகளின் அடிப்படையிலேயே பாதிக்கப்பட்டவர்களின் தொகை பற்றிய புள்ளிவிபரம் தயாரிக்கப்பட்டது. தற்போது வைத்தியசாலைகளில் மட்டுமன்றி வீடுவீடாகவும் விபரங்கள் பெற்றுக் கொள்ளப்படுகின்றது.

இதனாலேயே தற்போது சரியான விபரத்தினை பெற்றுக்கொள்ள முடிந்துள்ளதாக ஐ.நா.சபையின் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

எச்.ஐ.வி.ஆட்கொல்லி வைரஸினால் பாதிக்கப்பட்டுள்ள 33.2 மில்லியன் பேரில் 30.8 வீதமானோர் வயது வந்தோர் எனவும் 2.5வீதமானோர் சிறுவர்கள் எனவும் குறித்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இச் சிறுவர்கள் 15 வயதுக்குட்பட்டவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

எய்ட்ஸினால் 2.1 மில்லியன் மக்கள் 2007 ஆம் ஆண்டில் மரணமடைந்துள்ளனர். இவர்களில் 1.7 மில்லியன் பேர் வயது வந்தோர்களாவர், 3இலட்சத்து 33 ஆயிரம் பேர் சிறுவர்களாவர்.

மேலும், 2007ஆம் ஆண்டில் 2.5 மில்லியன் பேர் புதிதாக இந்த தொற்றுக்குள்ளாகியிருக்கின்றனர். இவர்களில் 2.1 மில்லியன் பேர் வயது வந்தோர்களாவர்.சிறுவர்கள் 4 இலட்சத்து 20 ஆயிரம் பேர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தக் கொடூர எய்ட்ஸினால் ஒவ்வொரு நாளும் 5 ஆயிரத்து 700 பேர் இறக்கும் அதேவேளை, 6 ஆயிரத்து 800 பேர் பாதிக்கப்படுகின்றனர் என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

இலங்கையில் சுமார் 5 ஆயிரம் பேர் எய்ட்ஸினால் பாதிக்கப்பட்டுள்ளனர். இருந்த போதிலும் இத்தொற்று பரவும் வீதம் தற்போது குறைவடைந்து வருவதாகவும் சில தகவல்கள் கூறுகின்றன. (ச)

# நீதிமன்ற உத்தரவுக்கமைய ஆயுதங்கள் செயலிழப்பு

(அநுராதபுரம்)

அநுராபுரம் விமானப் படைத்தளம் மீதான தாக்குதலில் ஈடுபட்ட கரும்புலிகளின் ஆயுதங்களை செயலிழக்கச் செய்யுமாறு அநுராதபுரம் மாவட்ட நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது.

அநுராதபுரம் விமானப் படைத்தளம் மீதான தாக்குதலில் 21 கரும்புலி மாவீரர்கள் உயிரிழந்த பின்னர் அங்கிருந்து இராணுவத்தினர் எடுத்த ஆயுதங்களை நீதிமன்றத்தின் பார்வைக்கு அனுப்புமாறு கடந்த வாரம் அநுராதபுரம் நீதிமன்ற நீதிபதி வசந்த ஜினதாச உத்தரவிட்டிருந்தார்

இதனையடுத்து அந்த ஆயுதங்களை அநுராதபுர பொலிஸ் தலைமையக அதிகாரி மகிந்த விஜயரட்ன கடந்த புதன்கிழமை நீதிமன்றத்தில் சமர்ப்பித்தார்.

இதில் ஆர்.பி.ஜி.லோஞ்சர்களும் அவற்றுக்கான குண்டுகள், கைக்குண்டுகள், செய்மதி தொடர்பு சாதனக் கருவிகள், இரவுப் பார்வை துப்பாக்கிகள், கிரனைட் லோஞ்சர்கள், ரி-56ரக துப்பாக்கிகள், தற்கொலைக்குண்டு பொருத்திய அங்கிகள் மற்றும் ஆடைகள் ஆகியவற்றை நீதிமன்றத்தில் சமர்ப்பித்தனர்.

அவற்றை பார்வையிட்ட நீதிபதி,இரசாயனப் பகுப்பாய்வின் பின்னர் செயலிழக்கச் செய்யுமாறு பொலிஸாருக்கு உத்தரவிட்டார்.

இதனையடுத்து இந்த ஆயுதங்களை அநுராதபுரம் நாச்சியாகுளம் பகுதியில் பொலிஸார் செயலிழக்கச் செய்ததாக கூறப்படுகிறது. (ச-5)

## புத்தளம் இராணுவ அதிகாரி மனைவி சுட்டுக்கொலை

புத்தளம் இராணுவ கட்டளைத் தளபதி சந்தன ரூபசிங்கவின் மனைவி சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார். களனிய சபுஸ்கந்தவில் உள்ள அவரது இல்லத்தில் நேற்று அதிகாலை அவர் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார். சம்பவம் தொடர்பில் மேலதிக விபரங்கள் எதுவும் வெளியாகவில்லை. (ச-5)

## யுரேக்காவின் ஏற்பாட்டில் பயிற்சிப் பட்டறை

வங்கியியலாளர்கள் மற்றும் காப்புறுதித் துறை சார்ந்தவர்களுக்கான விசேட பயிற்சிப் பட்டறை ஒன்று இன்று யாழ்.நகரில் ரில்கோ விடுதியில் நடைபெறவுள்ளது.

வாடிக்கையாளர் பாதுகாப்பு முகாமைத்துவம் என்ற பொருளில் நடைபெறும் இப்பயிற்சிப் பட்டறையை யுரேக்கா என்ற தொண்டு நிறுவனம் ஒழுங்கு செய்துள்ளது. இதில் இந்தியாவில் இருந்து வருகை தந்துள்ள கலாநிதி பாரிவள்ளல் பயிற்சி வழங்கவுள்ளார். (ச)

## வீடியோ நிகழ்ச்சி

(யாழ்ப்பாணம்)

மகராஜியின் அமைதியின் சொற்கள் பற்றிய வீடியோ நிகழ்வு இன்று காலை 10.00 மணிக்கு நாவலர் கலாசார மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (ச)

## யாழ்.லயன்ஸ் கழகத்தின் இலவச மருத்துவ முகாம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண லயன்ஸ் கழகம் இலவச மருத்துவ முகாம் ஒன்றை நாளை காலை 9.00 மணிக்கு யாழ்.பண்ணை மார்பு நோய் சிகிச்சை நிலையத்தில் நடாத்தவுள்ளது.

அன்றைய தினத்தில் நீரிழிவு, கண்பரிசோதனை, மார்பு சிகிச்சை, இலவச மூக்குக் கண்ணாடி வழங்கல், ஆஸ்துமா போன்ற நோய்களுக்கு ஏற்ற வகையில் யாழ்.வைத்தியசாலை வைத்திய நிபுணர்களால் சிகிச்சைகள் வழங்கப்பட்டு இலவச மருந்துகளும் வழங்கப்படும். பயனாளிகள் வருகை தந்து பயன் பெறுமாறு யாழ்.லயன்ஸ் கழகம் கேட்டுள்ளது. (எ)

# ஒரு கோடி ரூபா நட்டஈடு கோரி ஆர்தர் வாமனன் வழக்குத் தாக்கல்

(கொழும்பு)

பொலிஸார் தன்னை கைது செய்ததை எதிர்த்து ஒரு கோடி ரூபா நட்டஈடு கோரி தமிழ் ஊடகவியலாளர் ஆர்தர் வாமனன் உயர் நீதிமன்றில் அடிப்படை உரிமை மீறல்வழக்கு தொடுத்துள்ளார்.

உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ள வழக்கில் ஆர்தர் வாமணன் கூறியுள்ளதாவது, கடந்த மாதம் ஒக்டோபர் 24 ஆம் திகதி பொலிஸாரால் கைது செய்யப்பட்டேன். பொலிஸாரின் தடுப்புக்காவலில் மறுநாள் மாலை 3.00 மணிவரையும் தடுத்து வைக்கப்பட்டேன். இது சட்டவிரோதமானது.

பொலிஸாரால் தடுத்து வைக்கப்பட்ட போது மாற்று உடைகள் அணியவும் அனுமதிக்கவில்லை. தமிழ் அல்லது ஆங்கில மொழியில் வாக்குமூலம் அளிக்கவும் வாய்ப்பளிக்கவில்லை.

பொலிஸாரின் எதிர்ப்புக்களை பொருட்படுத்தாமலேயே ஒக்டோபர் 26 ஆம் திகதி கல்கிசை நீதிமன்றம் என்னை பிணையில் விடுவித்தது.

அமைச்சர் மனோ விஜயரட்ணவிடமிருந்து செல்லிடத் தொலைபேசி மூலம் பெருந்தொகை பணத்தை கோரியதாக என் மீது குற்றஞ்சாட்டப்பட்டது. அக் குற்றச்சாட்டை நான் மறுக்கிறேன்.

தனது அடிப்படை உரிமைகள் மீறப்பட்டிருப்பதை நீதிமன்றம் உறுதிப்படுத்தி ஒரு கோடி ரூபா நட்டஈடு வழங்கவேண்டுமென்று அம்மனுவில் ஆர்தர் வாமணன் குறிப்பிட்டுள்ளார்.

இந்த வழக்கில் பொலிஸ்மா அதிபர் விக்டர் பெரேரா, குற்றப்புலனாய்வு திணைக்கள பொறுப்பாளர், அமைச்சர் மனோ விஜயரட்ண, சட்டமா அதிபர் உள்ளிட்டோர் பிரதிவாதிகளாக குறிப்பிடப்பட்டுள்ளனர். (ச-5)

# வலி கிழக்கு பிரதேச சபை,புத்தூர். கேள்வி அறிவித்தல்-கால நீடிப்பு வழங்கல்.

**இப்பத்திரிகையில் 06.11.2007-ல் பிரசுரமாகிய கேள்வி அறிவித்தல் விளம்பரமானது பின்வருமாறு கால நீடிப்பு வழங்கப்படுகின்றது என்பதை அறியத் தருகின்றேன்.**

**கேள்விப் பத்திரம் வழங்கப்படும் திகதி:30.11.2007 பி.ப 2.00மணிவரை**

**கேள்விப்பத்திரம் ஏற்றுக் கொள்ளப்படும் திகதி: 03.12.2007 நண்பகல் 12.00 மணிவரை**

**கேள்விப்பத்திரம் திறந்து பரிசீலிக்கப்படும் திகதி: 03.12.2007 பி.ப 1.00 மணி.**

**(கேள்விப்பத்திரம் திறந்து பரிசீலிக்கும்போது கேள்விப் பத்திரதாரரும் சமூகமளிக்கலாம்)**

வலி கிழக்கு பிரதேச சபை,
தலைமை அலுவலகம்,புத்தூர்.
22.11.2007

தம்பையா நடராசா,
செயலாளர்.

(சி-558)

# அலையில் சிக்கிய குமுதினி பாறையுடன் மோதியது

## நெடுந்தீவுக் கடலில் சம்பவம்

(நெடுந்தீவு)

குறிகாட்டுவானிலிருந்து நெடுந்தீவுக்குச் சென்ற குமுதினிப் படகு அலையில் சிக்கி பாறையுடன் மோதியது. இச்சம்பவம் நேற்று முன்தினம் மாலை இடம்பெற்றது.

குறிகாட்டுவானிலிருந்து நேற்று முன்தினம் பயணிகளுடன் புறப்பட்ட, வீதி அபிவிருத்தி அதிகார சபைக்குச் சொந்தமான குமுதினிப் படகு நெடுந்தீவு கரையை அண்மித்த போது அலையில் சிக்கி பாறையுடன் மோதியது.

இதனையடுத்து படகு தத்தளிக்க அதிலிருந்த பயணிகள் அல்லோலகல்லோலப்பட்டு கூச்சலிட்டனர். சம்பவத்தை அறிந்து விரைந்து சென்ற கடற்படையினர் தமது படகில் பயணிகளை ஏற்றி கரைக்குக் கொண்டு சென்றனர்.

அண்மைய நாட்களாக காற்றுடன் கூடிய மழை பெய்து வருவதால் கடல் கொந்தளிப்புடன் காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (எ)



பருத்தித்துறை தேசிய சேமிப்பு வங்கியின் கணினி மயப்படுத்தப்பட்ட வாடிக்கையாளர் சேவை ஆரம்ப விழாவில் பங்குத்தந்தை அருட்திரு. பயஸ் இருதயதாஸ் ஆசி வழங்குவதையும்,பேராசிரியர் எம்.நடராஜசுந்தரம், சுவாமி சித்ரூபானந்தா ஆகியோர் அமர்ந்திருப்பதையும், பருத்தித்துறை பிரதேச செயலர் ஆர்.வரதீஸ்வரன் உரையாற்றுவதையும், கணினிச்சேவைகளை மிகத் திறமையாக மேற்கொண்ட வங்கி உத்தியோகத்தர் ஜி.பிரதீபனுக்கு அரசாங்க அதிபர் கே.கணேஷ் விருது வழங்கி கௌரவிப்பதையும், வங்கி முகாமையாளர் எம்.பரமானந்தன் அருகில் நிற்பதையும் படங்களில் காணலாம். (பரு.நிருபர்)


## டுபாய் ரெலிக்கொம் கேபிள் லைன் உதவியாளர்கள்

**(உடனடிப் பயணம்-ஆண்கள் மட்டும்)**

**சம்பளம் - 800 டினார்**

***விதிகளும் நிபந்தனைகளும்***

இரண்டு வருட ஒப்பந்தம். வேலை நேரங்கள் நாள் ஒன்றுக்கு எட்டு மணித்தியாலங்கள், வாரம் ஒன்றுக்கு ஆறு நாட்கள். இலவச தங்குமிடம். இலவச மருத்துவம் மற்றும் இலவச உணவு வழங்கப்படும். ஒப்பந்த காலவரை முடிவடைந்ததன் பின்னர் தகுதிகாண் காலவரை 90 நாட்கள்.

வயதெல்லை:- 18-45. அனுபவமுள்ளவர்கள்/ பயிலுநர்கள் தமது கடவுச் சீட்டுடன் கீழ்க் காணப்படும் முகவரிக்கு வரவும். மூன்று வாரங்களுக்குள் பயணம். நேர்முகப் பரீட்சைகள் தற்போது நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. முற்பகல் 9 மணியிலிருந்து பிற்பகல் 7 மணிவரை. (ஞாயிற்றுக்கிழமையும்) திறந்திருக்கும்.

அராபியன் றோல் குறூப் (பிறைவேட்) லிமிடெட்
375, முதலாம் மாடி, ஆர்.ஏ.டி. மெல் மாவத்தை ,
(டுப்பிளிகேசன் றோட்) கொழும்பு-3.
தொலைபேசி 0112 370653, 0112 502719
(டேர்டன் வைத்தியசாலைச் சந்தி அருகில் மஹாநாம வித்தியாலயத்துக்குப் பக்கத்தில்)

அனுமதி இலக்கம்:- ஏஎல்/960/ விளம்பரம்/ 03,05/07.

மேலும் தகவல்களுக்கு தங்களுக்கு அருகிலுள்ள உப முகவரைத் தொடர்பு கொள்ளவும்.

ரகுபதி-துவாரகா இலத்திரனியல்,
22,கே.கே.எஸ். வீதி,
சுன்னாகம்.
தொலைபேசி:- 0112 514003
துஷாந்தன் கந்தசாமி,
சூராவத்தை.
தொலைபேசி:-077 3405643,077 5245554

பல்கலைக்கழகங்கள், அமைச்சுக்கள் மற்றும் குடிவரவு குடியகல்வுத் திணைக்களங்கள், பூந்தோட்டங்களில் வேலைவாய்ப்பு.

**உபமுகவர்களும் தொடர்பு கொள்ளலாம்.**

(சி-556)

## டுபாயில் வெற்றிடங்கள் யூ.ஏ.ஈ.-எம்.பி.எம்.கம்பனி

**(உடனடிப் பயணம்)**

| இல. | தொழில் | சம்பளம் |
| --- | --- | --- |
| 01. | ஆண் சுத்திகரிப்பாளர் | டினார் 600/= |
| 02. | பெண் சுத்திகரிப்பாளர் | டினார் 500/= |

***விதிகளும் நிபந்தனைகளும்***

இரண்டு வருட ஒப்பந்தம். வேலை நேரங்கள் நாள் ஒன்றுக்கு எட்டு மணித்தியாலங்கள், வாரம் ஒன்றுக்கு ஆறு நாட்கள். இலவச தங்குமிடம். இலவச மருத்துவம் மற்றும் இலவச உணவு வழங்கப்படும். ஒப்பந்த காலவரை முடிவடைந்ததன் பின்னர் தகுதிகாண் காலவரை 90 நாட்கள்.

வயதெல்லை:- 18-45. அனுபவமுள்ளவர்கள்/ பயிலுநர்கள் தமது கடவுச் சீட்டுடன் கீழ்க் காணப்படும் முகவரிக்கு வரவும். மூன்று வாரங்களுக்குள் பயணம். நேர்முகப் பரீட்சைகள் தற்போது நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. முற்பகல் 9 மணியிலிருந்து பிற்பகல் 7 மணிவரை. (ஞாயிற்றுக்கிழமையும்) திறந்திருக்கும்.

அராபியன் றோல் குறூப் (பிறைவேட்) லிமிடெட்
375, முதலாம் மாடி, ஆர்.ஏ.டி. மெல் மாவத்தை ,
(டுப்பிளிகேசன் றோட்) கொழும்பு-3.
தொலைபேசி 0112 370653, 0112 502719
(டேர்டன் வைத்தியசாலைச் சந்தி அருகில் மஹாநாம வித்தியாலயத்துக்குப் பக்கத்தில்)

அனுமதி இலக்கம்:- ஏஎல்/960/ விளம்பரம்/ 03,05/07.

மேலும் தகவல்களுக்கு தங்களுக்கு அருகிலுள்ள உப முகவரைத் தொடர்பு கொள்ளவும்.

ரகுபதி-துவாரகா இலத்திரனியல்,
22,கே.கே.எஸ். வீதி,
சுன்னாகம்.
தொலைபேசி:- 0112 514003
துஷாந்தன் கந்தசாமி,
சூராவத்தை.
தொலைபேசி:-077 3405643,077 5245554

பல்கலைக்கழகங்கள், அமைச்சுக்கள் மற்றும் குடிவரவு குடியகல்வுத் திணைக்களங்கள், பூந்தோட்டங்களில் வேலைவாய்ப்பு.

**உபமுகவர்களும் தொடர்பு கொள்ளலாம்.**

(சி-556)

# இன்று ஒரு தகவல்

## மூளை பலம்

என் நண்பர் ஒருவர் தினமும் ஒருமுறை திராட்சைப் பழச் சாறு சாப்பிடுவார் ''என்ன சார் இது.. திராட்சை என்றால் உங்களுக்கு அவ்வளவு பிரியமா?'' என்று கேட்டேன். ''பிரியமென்று இல்லை; இது எனக்கு அவசியம் தேவை. உங்களுக்கெல்லாம் அவசியமில்லை'' என்றார். ''ஒன்றும் புரியவில்லையே'' என்றேன். பார்த்தீர்களா! அதற்குத்தான் சொன்னேன். மூளையை அதிகமாகப் பயன்படுத்தி வேலை செய்கிறவர்களுக்குத் தான் திராட்சை ரொம்ப அவசியம் என்றார். ஏதோ கொஞ்சம் புரிகிறமாதிரி இருந்தது. நேராக எனக்குத் தெரிந்த ஒரு சித்த வைத்தியரிடம் போனேன். என்ன சார் இது என்று கேட்டேன் அவர் விபரமாகச் சொன்னார்.

திராட்சை மூளைக்குப் புத்துணர்ச்சி கொடுக்கும் களைப்பைப் போக்கும் என்றார். "அந்தப் பழத்துக்கு மட்டும்தான் அப்படியொரு சத்தியா?" என்று கேட்டேன். "அப்படியில்லை" என்று சொல்லி விட்டு அவர் விளக்கமாகச் சொல்ல ஆரம்பித்தார்

மனிதனுக்கு மூளை தெளிவாகவும் இருக்கவேண்டும். வலிவாகவும் இருக்க வேண்டும். அதற்காக மூளைக்கு தகுந்த ஊட்டம் கொடுக்க வேண்டும். சிலவகையான பழங்களுக்கு அந்தச் சக்தி இருக்கிறது. சில உலர்ந்த பழங்களுக்கும் புதுப் பழங்களுக்கும் மூளை, சதைத் திசுக்களிலே ஏற்படக்கூடிய நோய்களைப் போக்கும் தன்மை இருக்கிறது. வாதுமை மூளைக்குச் சக்தியைக் கொடுக்கக் கூடியது.

தசைகளுக்கு வலுவைக் கொடுக்கிறது. நரம்புகளுக்கும் பித்தப் பைக்கும் நோய் வராமல் காப்பாற்றுகிறது. வால்நட் என்ற பழமும் மூளை யின் பலவீனத்தைக் குணப்படுத்தும். அத்துடன் அத்திப்பழம், உலர்ந்த திராட்சையைச் சேர்த்துச் சாப்பிட்டால் மிகவும் நல்லது. பொதுவாகக் கூறுவதானால் பரஸ்பரஸ் சத்து எந்தெந்தப் பழங்களிலே அதிகமாக இருக்கிறதோ அவை மூளை, செல், திசுக்களை பலப்படுத்த உதவும். மூளைக்கு வேலை கொடுப்பவர்களெல்லாம் பரஸ் பரஸ் சத்து அதிகமாகவுள்ள பழங்களைச் சாப்பிட வேண்டும். வாதுமை, அத்தி, திராட்சை, பேரீந்து, ஆப்பிள், தோடப்பழம் முதலியவற்றில் பரஸ்பரஸ் சத்து அதிகமாக இருக்கிறது. பரஸ்பரஸ் புலனுறுப்புகளுக் கும் ஊட்ட சக்தியைக் கொடுக்கும் ஆப்பிள் மிகவும் நல்லது. தினம் ஒன்று சாப்பிடலாம்.

தினம் ஒரு ஆப்பிள் பழம் சாப்பிட்டு வந்தால் நோய் எதுவும் வராது என்று கூறுவார்கள். ஆப்பிள் பழத்தில் இருக்கும் அத்தனை சத்துகளும் நெல்லிக்காயில் இருக்கிறது. அதனாலே தான் நெல்லிக்காயை ஏழைகளின் ஆப்பிள் எனக் கூறுகிறார்கள்.

நமது ஊரிலே எல்லாருக்கும் இந்தப் பழங்களைச் சாப்பிடக் கூடிய வாய்ப்பும் வசதியும் இல்லை. என்ன செய்வது? திராட்சை, பேரிக்காய், வாழைப்பழம், அத்திப்பழம் பித்த நீர்க் கோளாறுகளைச் சரிப்பண்ணிவிடும். பழங்களிலே இருக்கிற சர்க்கரைச் சத்து சீக்கிரத்தில் சக்தியாக மாறிவிடும். அதனாலே அது உடம்புக்கு புத்துணர்ச்சியைக் கொடுக்கும். மூளையிலே இரத்த ஓட்டம் குறைவாக இருந்தால் ஊட்டப்பற்றாக் குறை ஏற்படும். அது மூளையைப் பலவீனப்படுத்தும். மூளை பலவீனப்பட்டால் பலவிதமான நோய்களுக்கு அது இடம் கொடுக்கும். கேட்கும் திறன் பாதிக்கப்படும். பார்வை மங்கும். களைப்பு-மயக்கம்-தலைவலி ஏற்படும்.

அதனாலே மூளையைப் பலமாக வைத்திருக்க வேண்டியது நமது கடமை. அத னால் உங்களாலே முடிந்த அளவுக்குப் பழங்களைச் சாப்பிடுங்கள். விலையுயர்ந்த பழங்களை வாங்க முடியாவிட்டால் உள்ளூரிலேயே கிடைக்கக் கூடிய பழங்களையாவது சாப்பிடுங்கள்.

தினம் ஒரு ஆப்பிள் சாப்பிடுங்கள் என்று நான் சொன்னால் நீங் கள் உடனே வாங்கிக்கொடுப்பது யார்? நீயா? என்று கேட்டாலும் கேட்பீர்கள். அதனாலேயே அப்படிச் சொன்னேன்.

நமது உடம்பிலே எந்தப் பாகம் பழுதுபட்டாலும் உடனே மாற்று உறுப்புவைத்து சிகிச்சை செய்கிறோம். அந்த அளவுக்கு வைத்தியம் வளர்ந்திருக்கிறது. இருந்தாலும் மூளையை மட்டும் முழுதாக அப்படிவைத்து சிகிச்சை செய்ய முடியவில்லையே! அப்படி முடிந்தாலும் சிறு நீரக மாற்றுச் சிகிச்சை போல மூளை மாற்றுச் சிகிச்சைக்கு யார் தங்களுடைய மூளை யைக் கொடுக்கத் தயாராக இருக்கிறார்கள்? அப்படிச் சிலர் தயாராக வந்தாலும் விரும்பி வாங்கும் அளவுக்குத் தரமான மூளை இந்தக் காலத்திலே எங்கே கிடைக்கப் போகிறது? இப் பொழுது எந்த மூளையைப் பார்த்தாலும் அதிலே வன்முறை, கபடம், சூழ்ச்சி என்பனதானே அதிகமாகத் தெரிகிறது. அதனாலே இருப்பது மோசமடையாமல் இருக்கிற மூளையையே காப்பாற்றிக்கொள்ளுங்கள்.

. அப்படிச் செய்யாவிட்டால் நீங்களும் என் மாதிரி ''இன்று ஒரு தகவல்'' சொல்லிக்கொண்டிருக்க வேண்டியது தான்!

தென்கச்சி கோ சுவாமிநாதன்

# தமிழர் புனர்வாழ்வு கழகத்தின் மீதான தடை ஐ.நா.வின் பணிகளில் பாதிப்பு ஏற்படுத்தாது

## ஐ.நா.வின் வதிவிட பிரதிநிதி நெய்ல் புகுனே தெரிவிப்பு

தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தின் மீதான இலங்கை அரசாங்கத்தின் தடையானது ஐ.நா. முகவர் நிறுவனங்களின் செயற்பாட்டை எந்த வகையிலும் பாதிக்காது என ஐக்கிய நாடுகள் சபையின் வதிவிட பிரதிநிதி நெய்ல் புகுனே தெரிவித்தார். இராணுவ கட்டுப்பாடற்ற பகுதிகளில் தமிழர் புனர்வாழ்வு கழகத்துடன் இணைந்து ஐ.நா. முகவர் அமைப்புக்கள் தற்போது எந்தவொரு செயற்திட்டத்தையும்முன்னெடுக்கவில்லை எனவும் அவர்சுட்டிக்காட்டினார்.

கடந்த 2002 ஆம்ஆண்டு அரசாங்கத்துக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் போர் நிறுத்த ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டதன் பின்னரே கட்டுப்பாடு அற்ற பிரதேசங்களில் ஐ.நா. முகவர் நிறுவனங்கள் தமிழர்புனர்வாழ்வு கழகத்துடன் இணைந்து செயற்பட்டன.

எனினும், அதே வேளையிலும் அரசாங்கத்தின் அனுமதி பெறப்பட்ட பின்னரே குறித்த செயற்திட்டங்களினை ஐ.நா. முகவர் நிறுவனங்கள் தமிழர் புனர்வாழ்வு கழகத் துடன் இணைந்து செயற்பட்டன.

எனினும்கடந்த வருடம் முதல் நாம் தமிழர் புனர்வாழ்வு கழகத்துடன் இணைந்து ஐ.நா. முகவர் நிறுவனங்கள்எந்தவொரு செயற்திட்டத்தையும் அமுல் படுத்தவில்லை.

அரசாங்க கட்டுப்பாடற்ற பகுதிகளில் பல்வேறு ஐ.நா. முகவர் நிறுவனங்கள் தற்போது நிவாரண, புனரமைப்பு அபிவிருத்தி செயற்திட்டங்களை முன்னெடுத்து வருகின்றன.

எனவே தமிழர் புனர்வாழ்வு கழகத்தின் மீதான இலங்கை அர சாங்கத்தின் தடையாக இராணுவ கட்டுப்பாடற்ற பகுதிகளில் ஐ.நா. முகவர் நிறுவனங்கள் மேற்கொண்டு வரும் மனிதாபிமான பணிகளில் எந்தவித பாதிப்பையும் ஏற்படுத்தாது. (அ-5)

# வடமாகாண மின்சாரசபை பதவி வெற்றிடங்கள்

(யாழ்ப்பாணம்)

இலங்கை மின்சார சபை வட மாகாணத்தில் காணப்படும் 14 பதவி வெற்றிடங்களுக்கு விண்ணப்பங்களை கோரியுள்ளது.

13 மின் அத்தியட்சர் பதவி வெற்றிடங்கள், ஒரு கணக்காளர் பதவி வெற்றிடம் ஆகிய14 பதவி வெற்றிடங்களுக்கும் தகுதியானவர்கள் குறைந்தது ஆறு வருட காலங்களுக்கு வடமாகாணத்தில் கடமை புரிவதற்கு விரும்புபவர்கள் எதிர்வரும் டிசம்பர் 3 ஆம் திகதி திங்கட்கிழமைக்கு முன்னர் விண்ணப்பிக்குமாறு கோரப்பட்டுள்ளனர்.

விண்ணப்பங்களை மேலதிக பொது முகாமையாளர், மின்சாரசபை 4 ஆவது மாடி இலக்கம் 50 சிற்றம்பலம் ஏ காடினர் மாவத்தை கொழும்பு -02 முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்பி வைக்குமாறு அறிவு றுத்தப்பட்டுள்ளது. இலங்கை மின்சார சபையின் வடபிராந்தியத்துக்கு உட்பட்ட யாழ்ப்பாணம், கிளிநொச்சி, வவுனியாபிரதேச அலுவலகங்களில் பதவி வெற்றிடங்களுக்கே விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. (அ-5)

# புதுப்பொலிவுடன் புனித மாதா

ஒரு நூற்றாண்டு காலம் பழமை வாய்ந்த புனித மாட்டினார் குருமடம் முன்பாக நிறுவப்பட்டிருந்த அருள்மிகு யாழ். கொஞ்செஞ்சி மாதாவின் உருவச் சிலை அண்மையில் புனருத்தாரணம் செய்யப்பட்டு, ஒளி மிகு மின்விளக்குகளாலும் மினுங்கும் சிறு விளக்குகளினாலும் அலங்கரிக்கப்பட்டுள்ளது. இந்த அலங் கார மின் விளக்குகள் அண்மையில் யாழ்.புனித மரியன்னை பேராலய 2 ஆம் கட்டளை அருட்தந்தை பிராய்ன் ஏற்றிவைத்தார்.

இத்திருப்பணியை முன்னின்று நடத்திய திருமலை க.பொ. வரதராசனின் சேவையையும் அவர் புகழ்ந்துரைத்தார். (அ-6)

# எதிர்க்கட்சியோ, ஆளுங்கட்சியோ திருடன், திருடன் தான்

## பிரதியமைச்சர் டிலான்

எனக்கு யாரும் வெள்ளையடிக்க முடியாது. எனினும் அன்று நான் அரசியல் திருடர்கள் இருக்கின்றனர் என்று கூறியபோது அரசாங்கத்தில் இருந்தவர்கள் எனக்கெதிராக இருந்தனர். எனினும் எதிர்க்கட்சியோ, ஆளுங்கட் சியோ திருடன் திருடன் தான் என்று பிரதியமைச்சர் டிலான்பெரேரா தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நடைபெற்ற வரவு-செலவுத்திட்டம் மீதான குழு நிலை விவாதத்தின் மூன்றாவது நாள் விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அங்கு அவர் தொடர்ந்து உரையாற்றுகையில், மேலும் கூறியதாவது,

சிங்கப்பூர் போன்ற நாடுகள் துறைமுகம், கப்பல்கள் மூலமாகவே அபிவிருத்தியடைந்தன. எனினும் ஹம்பாந்தோட்டை துறைமுகத்தை நிர்மாணிப்பதற்கு பலநாடுகள் எதிர்ப்பு தெரிவித்தன. அமெரிக்க பிரஜை என்று விமர்சிப்பவர்கள் கனடா பிரஜையைக் கொண்டு ஹம்பாந்தோட்டை துறைமுக நிர்மாணத்தை தடுத்து நிறுத்துவதற்கு முயற்சிகளை மேற்கொண்டனர். (அ-5)

# இராசிபலன்

24.11.2007
(கார்த்திகை 08, சனிக்கிழமை)
பூரணை முன்னிரவு 08.55 மணிவரை
கார்த்திகை பின்னிரவு 12.45 மணிவரை
இராகுகாலம் 09.11-10.41 மணிவரை
சுபநேரம் 03.11-04.41 மணிவரை
பூரணை விரதம்
திருக்கார்த்திகை விரதம்
குமாராலய தீபம்
வீடுகளில் தீபம்

| | |
|---|---|
| மேடம் | போசன சுகக்குறைவு, வீண் விவாதம், காரிய தாமதம், பெரியோர் வெறுப்பு. |
| இடபம் | போசனசுகம், நண்பர்கள் சந்திப்பு, முயற்சி கைகூடும், சயனசுகம். |
| மிதுனம் | அமைதிக்குறைவு, நல்ல முயற்சி, திடீர் பயணம், சுபசெலவு. |
| கடகம் | தனதானிய சேர்க்கை, நண்பர்கள் சந்திப்பு, மனமகிழ்ச்சி, பெருமையடைதல். |
| சிங்கம் | கடினமுயற்சி, சுபசெய்தி, பிறர் உதவி, உடல்நலம். |
| கன்னி | புதிய திட்டமிடல், ஆரோக்கியக் குறைவு, பொருள் விரயம், கட்டுப்பாடு. |
| துலாம் | முழங்கால் வலி, காரிய தடங்கல், பொருள் விரயம், வீண்பகை. |
| விருச்சிகம் | உறவினர் உதவி, களஸ்திர நன்மை, முயற்சி கைகூடும், பிரயாண நன்மை. |
| தனுசு | தடைப்பட்ட காரியம் கைகூடும், தேக நலன், சுபநிகழ்வு, போசனசுகம். |
| மகரம் | பணக்குறைவு, புத்திரரால் கவலை, சிறுவியாதி, முயற்சி தாமதம். |
| கும்பம் | பயந்த சுபாவம், கல்வியில் ஆர்வம், ரோகநிலை, தாய்வழி உறவு. |
| மீனம் | சகோதரர் உதவி, கூட்டு முயற்சி, இனிய சம்பவம், வாக்குமேன்மை. |

வ ள வ ன்

# புதிய இயக்கமொன்றை உருவாக்க தமிழ்மக்கள் விடுதலைப்புலிகள் முயற்சி

கிழக்கு மாகாணத்தில் இயங்கி வரும் தமிழ் இயக்கங்களை ஒன்றிணைந்துபுதிய இயக்கமொன்றை உருவாக்க தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் இயக்கம் தீர்மானித்துள்ளது. மட்டக்களப்பு பிரதேசத்தில் கடந்த (20 ஆம் திகதி) இடம் பெற்ற கூட்டமொன்றின் போதே மேற்படி இயக்கத்தால் இத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

ஈ.பி.டி.பி, ரெலோ, புளொட் மற்றும்ஈ.பி.ஆர்.எல்.எப் போன்ற இயக்கங்களின் கிழக்கு மாகாணத்தலைவர்களைவெகுவிரைவில்அழைத்து இப்புதிய இயக்கம் தொடர்பான பேச்சுவார்த்தையினை மேற்கொள்ளப் போவதாகவும் அப்பேச்சுவார்த்தையின் போது புதிய இயக்கத்தின் நோக்கம் மற்றும் கொள்கைகள் பற்றி கலந்துரையாடி தீர்மானம் எடுக்கப்படவுள்ளதாகவும் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் இயக்கத்தின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

இப்புதிய இயக்கம் தொடர்பான நடவடிக்கைகள் சாதகமாக அமையுமாயின் மேற்படி இயக்கங்களின் தலைவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்துவதாகவும் அவர்களின்ஒத்துழைப்பு மூலம் புதிய இயக்கத்தை அபிவிருத்தி செய்வதாகவும் மேற்படி தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் இயக்கத்தின் பேச்சாளர் மேலும் தெரிவித்தார்.

(22.11.2007 லங்காதீப)




அண்மையில் இலங்கை வங்கி ஊர்காவற்றுறை கிளையில் 18 சேமிப்புக்கணக்கு வைத்திருப்பவருக்கு ''திருமண நாள் பரிசான தங்க நாணயத்தினை'' கிளை முகாமையாளர் வழங்குவதனையும், வங்கி அலுவலர்கள் பக்கத்தில் நிற்பதையும் படத்தில் காணலாம்.

## கோட்டமட்ட எழுத்தாக்கப் போட்டிகள் 6ஆம் திகதி

(யாழ்ப்பாணம்)

யாழ்.கல்வி வலய கோட்ட மட்ட எழுத்தாக்கப் போட்டிகள் 1 தொடக்கம் 4 வரையான பிரிவுகளுக்கு எதிர் வரும் 28 ஆம் திகதி புதன்கிழமை காலை 9 மணிக்கும்,

பிரிவு 5க்கான போட்டி டிசம்பர் மாதம் 6ஆம் திகதியும் யாழ்.இந்து மகளிர் கல்லூரியிலும் நடைபெறும் என்றும்,

போட்டி நடைபெறும் தினத்தன்று ஆரம்பக் கல்வி, தமிழ் பாடம் கற்பிக்கும் ஆசிரியர்களையும் அனுப்பி வைக்குமாறு நல்லூர் கோட்டக் கல்விப் பணிப்பாளர் கேட்டுள்ளார். (அ-6)

# காங்கேசன்துறை துறைமுகத்திற்கு கப்பலில் பொருட்களை கொண்டு செல்ல அனுமதி மறுப்பு

## மகேஸ்வரன் எம்.பி. சபையில் குற்றச்சாட்டு

கப்பல் மூலம் காங்கேசன் துறைக்கு பொருட்களை கொண்டு செல்வதற்கு கடற்படை புதிய விதி முறைகளை விதித்து தடை செய்துள்ளது என்று ஐக்கிய தேசியக் கட்சியின் கொழும்பு மாவட்ட எம்.பி. தியாகராஜா மகேஸ்வரன் சபையில் குற்றம்சாட்டினார்.

வரவு-செலவுத் திட்ட மூன்றாம் வாசிப்பு மீதான மூன்றாம் நாள் விவாதத்தில் உரையாற்றிய அவர் மேலும் கூறியதாவது,

காங்கேசன்துறை துறைமுகத்திலிருந்து கடந்த வருடம் 400 மில்லியன் ரூபா இலாபமாக கிடைக்கப் பெற்றுள்ளது. அத்துடன் 11க்கும் மேற்பட்ட கப்பல்கள் சேவையில் ஈடுபடுகின்றன.

ஏ-9 வீதி மூடப்பட்டதன் பின்னர் கொழும்பு-திருகோணமலையிலிருந்து 11 கப்பல்கள் காங்கேசன் துறை துறைமுகத்திற்கு சென்று வருகின்றன.

எனினும் அந்தக் கப்பல்களுக்கு பொருட்களை ஏற்றுகின்றபோது வெளிநாடுகளுக்கு ஏற்றப்படுகின்ற போது அறவிடப்படுகின்ற தொகையே இங்கும் அறவிடப்படுகின்றது.

12 கம்பனிகள் தான் இலங்கையில் பதியப்பட்டுள்ளன. எனினும் பாதுகாப்பு படையினர் கப்பல் சேவையில் கையடிக்கின்றனர்.

சைக்கிள் ஓட்ட தெரியாதவர்கள் கப்பல் குறித்துப் பேசுகின்றனர். கடற்படையினர் கப்பல்களுக்கு பல கட்டளைகளை பிறப்பிக்கின்றனர். புதிய விதிமுறைகளை நடைமுறைப் படுத்துகின்றனர். வர்த்தகத்தில் கடற்படை தலையிடமுடியாது. சில கப்பல்கள் தான் ஓடவேண்டும். வேறு கப்பல்களுக்கு தடை விதிக்கின்றனர். கடற்படை தளபதி தான் இந்தப் புதிய கட்டளைகளை இடுகின்றார்.

இந்தியாவுக்கு கூட ஓடுவதற்கு தகுதியான கப்பல்களை கொழும்பிலிருந்து காங்கேசன்துறைக்கு ஓட அனுமதிப்பதற்கு கடற்படைத் தளபதி தடை விதிக்கின்றார். (அ-5)

## அகத்தியர் தேவாரத்திரட்டு முற்றோதல்

அகில இலங்கை திருமுறை மன்றம் மாதாந்த பௌர்ணமித் தினத்தில் நடாத்தி வரும் அகத்தியர் தேவாரத் திரட்டு முற்றோதல், பன்னிரு திருமுறைப் பாராயணம், போற்றி அர்ச்சனை ஆகியன இன்று காலை 8மணிக்கு யாழ்ப்பாணம் நாவலர் வீதி கடையிற்சுவாமி குருவார அன்னசத்திர சிவன் கோயிலில் ஆலய பரிபாலகரின் அனுசரணையுடன் மன்றத் தலைவர் பண்டிதர்வ. பேரின்பநாயகம் தலைமையில் நடைபெறத் திருவருள் கூடியுள்ளது. (அ)

## மாதாந்த உதவி . பணக் கொடுப்பனவு

(யாழ்ப்பாணம்)

வலிகாமம் கிழக்கு கோப்பாய் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட, பொதுசன மாதாந்த உதவிப் பணக் கொடுப்பனவை பெறுபவர்களும் நோயாளர்களுக்கான உதவிக் கொடுப்பனவைப் பெறுபவர்களும்,

2007 டிசம்பர் மாதம் வரையான கொடுப்பனவை டிசம்பர் முதலாம் திகதி முதல் பத்தாம் திகதி வரை தபாலகங்களில் பெற்றுக் கொள்ளலாம் என வலி.கிழக்கு பிரதேச செயலர் சி.ஏ.மோகன்றாஸ் அறிவித்துள்ளார். (எ)

# கண்காணிப்பு பட்டியலில் இலங்கைக்கும் இடம்

ஊடக சுதந்திரம் மிக மோசமாக பாதிப்பிற்குள்ளாகியுள்ள நாடுகள் தொடர்பாக சர்வதேச பத்திரிகை ஸ்தாபனம் வெளியிட்டுள்ள கண்காணிப்பு பட்டியலில் எத்தியோப்பியா, நேபாளம், ரஷ்யா, வெனிசுலா, சிம்பாப்வே ஆகிய நாடுகளுடன் இலங்கையும் சேர்க்கப்பட்டுள்ளது. ஜேர்மனியின் மெயின்ஸ் நகரை தளமாகக் கொண்டியங்கும் சர்வதேச பத்திரிகை ஸ்தாபனமானது உலகில் ஊடக சுதத்திரத்தில் மிக மோசமாக அச்சுறுத்தலுக்குள்ளாகும் நாடுகள் தொடர்பான கண்காணிப்பு பட்டியலொன்றை ஆண்டுதோறும் வெளியிட்டு வருகின்றது. இக் கண்காணிப்பு பட்டியலில் கடந்த 2000 ஆம் ஆண் டிற்கு பின்னர் இந்த வருடமே இலங்கை மீண்டும் உள்ளடக்கப் பட்டுள்ளது. (எ-5)

## மீனின் விலை உயர்வு

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாநாட்டில் மீன் சந்தைகளில் மீன் வகைகளின் விலைகள் மிகவும் உயர்ந்துள்ளன.

மீன் வகைகளுக்குப் பெயர் பெற்ற யாழ். குருநகர்பாஷையூர், கொட்ட்டி, பருத்தித்துறை ஆகிய சந்தைகளில் மீன் விலைகள் உயர்ந்துள்ளதுடன் பற்றாக்குறையும் ஏற்பட்டுள்ளது. தற்போது ஒருகிலோ மீன் 600 ரூபா தொடக்கம் 800 ரூபா வரை விற்பனை செய்யப்படுகிறது.

குடாநாட்டில் தொடர்ந்து மழை பெய்து வருவதனால், கடற்றொழிலாளர்கள் மீன்பிடிக்க கடலுக்குச் செல்வது குறைவாக இருப்பதுடன், கடலில் மீன்வகைகளும் சரியான முறையில் பிடிபடுவதில்லையெனவும் இதனாலேயே மீன் வகைகளுக்கு பற்றாக்குறையும் விலை உயர்வும் ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை மரக்கறி வகைகளின் விலைகளும் தொடர்ந்தும் உயர்ந்த நிலையிலேயே இருப்பதால் பொது மக்கள் தமது அன்றாட உணவுக்கு கறித் தேவையைப் பூர்த்தி செய்வதில் பெரும் சிரமங்களை எதிர்கொண்டுள்ளனர். (அ-5)

## மாணவர்களுக்கு சட்ட ஆலோசனை வழங்க நடவடிக்கை

அடுத்த வருடம் முதல் பாடசாலை மாணவர்களுக்கு சட்ட ஆலோசனைகள் வழங்குவதற்கான நடவடிக்கையை கல்வி அமைச்சு மேற்கொண்டுள்ளது. நாட்டில் அதிகமான குற்றச்செயல்களுக்கு முக்கியமான காரணம் மக்கள் மத்தியில் சட்ட அறிவின்மையேஎன்பதைஉணர்ந்து இந்தத்திட்டம் மாணவப் பருவத்திலிருந்தே அறிமுகம் செய்யப்படவிருக்கிறது.

நாட்டில் தற்போது 10ஆயிரத்து 394 பாடசாலைகள் செயற்படுகின்றன. இவற்றில்4 இலட்சத்து 13ஆயிரத்து 400 மாணவர்கள் கல்வி கற்று வருகிறார்கள்.1இலட்சத்து88 ஆயிரத்து 340 ஆசிரியர்கள் சேவையில் இருக்கிறார்கள். இந்த ஆசிரியர்களுக்கு அடுத்த மாதத்திலிருந்து மாவட்ட மட்டத்தில் சட்ட ஆலோசனைக் கருத்தரங்குகளை நடத்தவும் கல்வி அமைச்சு ஏற்பாடு செய்துள்ளதாக சம்பந்தப் பட்ட அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (அ-5)

# நல்லூர் கோட்ட மட்ட தமிழ்மொழி தினப் போட்டி முடிவுகள்-2007

கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற தமிழ்த்தினப் போட்டி முடிவுகள் வருமாறு,

### பிரிவு 1

**வாசிப்பு**

க.விதுரா-கொக்குவில் இ.ஆ.பா., க.சரணியா-யாழ். இ.ஆ.பா, நி.பிரியங்கா-யா/ஆனைப்பந்தி மெ.மி.பா.

**ஆக்கத்திறன் வெளிப்பாடு**

பு.கஜலக்ஷன்-கொக்குவில் இ.ஆ.பா, பி.பிறின்சிகா-யாழ்.இ.ம.ஆ.பா., இ.ஹரிகரன்-நல்லூர் சென் பெடிக்.

**பேச்சு**

த.பிரவீனா-யாழ்.இ.ம.ஆ.பா., ம.திரிஷிகா-யாழ்.இ.ஆ.பா, ச.ஆர்பி-கொக்குவில் இ.ஆ.பா.

**பாவோதல்**

ஆ.ஆரங்கன்-யாழ்.இ.ஆ.பா., சு.சதுஸ்ரிகா-யாழ்.இ.ம.ஆ.பா.,இ.ஜனரஞ்சனி-கொக்குவில் இந்து ஆ.பா.

**இசையும் அசைவும்**

ச.அனுசாழினி-கோண்டாவில் இராமகிருஷ்ணா,ச.அபிஷா-நல்லூர் ஸ்தான சி.சி.,வி.ஜெனிபா-திருநெல்வேலி றோ.க.பா.

**நடனம் தனி**

ஈ.வித்தகி-யாழ்.இ.ஆ.பா, சி.திலக்ஷனா-கொக்குவில் இ.ஆ. பா., ஜெ.ஜசிகா-யாழ்ப்பாணம் இ.ம. ஆ.பா.

### பிரிவு 2

**வாசிப்பு**

ப.நிஸாந்தன் -நாயன்மார்கட்டு மகேஸ்வரி, சி.சஞ்சீவன்-கோண்டாவில் பரஞ்சோதி, ப.சுதர்சன்-இளையதம்பி இந்து வித்தி.

**பேச்சு**

அ.ஹரிசங்கர்-யாழ்.இந்துக் கல்லூரி,து.யுவரேகா-யாழ். இந்து மகளிர் கல்லூரி, இ.பிரியங்கா - கோண்டாவில் இந்து மகா வித்தி.

**பாவோதல்**

சி.விஷ்ணுசாந்-யாழ். இந்துக் கல்லூரி, ஜெ.மதுஷிகன்-கொக்குவில் இந்துக்கல்லூரி, செ.வியூசனா-செங்குந்தா இந்துக் கல்லூரி.

**இசை தனி**

பே.டினோசன்-யாழ்.இந்துக் கல்லூரி,தி.வருணி-யாழ்.இந்து மகளிர் கல்லூரி,ஸ்ரீ.ராகுலன்-கொக்குவில் இந்துக் கல்லூரி.

**நடனம் தனி**

க.விஷாலினி-யாழ்.இந்து மகளிர் கல்லூரி, த. இந்துஷானி-கொக்குவில் இந்துக் கல்லூரி, தி.லக்சனா-கோண்டாவில் இராம கிருஷ்ணா.

### பிரிவு 3

**பேச்சு**

அ.உமாகரன்-யாழ். இந்துக் கல்லூரி, க.சஞ்சீவன்-கொக்குவில் இந்துக்கல்லூரி,சு.சஞ்சிரன்-கோண்டாவில் மகா வித்தியாலயம்.

**பாவோதல்**

ச.யதுர்சன்-யாழ்.இந்துக்கல்லூரி, இ.தர்சிகா-செங்குந்தா இந்துக் கல்லூரி, வ.நிரோஜா-கோண்டாவில் இராமகிருஷ்ணா.

**இசை தனி**

வெ.அனுசியா- கோண்டாவில் இராம கிருஷ்ணா,ந.குலதீபன்-யாழ். இந்துக் கல்லூரி,சி.விதுனா-கொக்குவில் இந்துக் கல்லூரி.

**நடனம் தனி**

சி.வியூசா-யாழ்.இந்து மகளிர் கல்லூரி.

### பிரிவு 4

**பேச்சு**

கு.அர்ச்சனா-கனகரத்தினம் ம.ம.வித்தி., த.வேணுகா-நல்லூர் இந்து தமிழ் பெ.பாட., சி.இராகுல்-கொக்குவில் இந்துக் கல்லூரி.

**பாவோதல்**

பா.கிருசாயி-யாழ். இந்துக் கல்லூரி, சி.செல்வியமிலா-கனகரத்தினம் ம.ம.வித்தி., கு.தர்சிகா-கொக்குவில் இந்துக் கல்லூரி.

**இசை தனி**

த.உதயபவன்-கொக்குவில் இந்துக் கல்லூரி, ஜெ.யொன்சிகா-முத்துதம்பி மகா வித்தி., அ.குகேந்தினி-அரியாலை ஸ்ரீ பார்வதி வித்தி.

**நடனம் தனி**

கி.பிரவீனா-யாழ்.இந்து மகளிர் கல்லூரி, சி.சஞ்சிகா-செங்குந்தா இந்துக் கல்லூரி.

### பிரிவு 5

**பேச்சு**

ச.செந்தில்குமரன்-யாழ்.இந்துக் கல்லூரி, ஆ.பிரதீப்-கனகரத்தினம் ம.ம.வித்தி, ம.ஜனனி-யாழ். இந்து மகளிர் கல்லூரி.

**பாவோதல்**

சி.யதுகுலன்-யாழ்.இந்துக் கல்லூரி, த.தனுஜா-கொக்குவில் இந்துக் கல்லூரி, ச.சிந்துஜா- கோண்டா வில் இராம கிருஷ்ணா

**இசை தனி**

செ.சந்திரிகா-யாழ்.இந்து மகளிர் கல்லூரி, இ.ஜயகிருஷ்ணன்-யாழ். இந்துக்கல்லூரி,சி.சுகந்தினி- கனகரத்தினம் ம.ம.வித்தி.

**நடனம் தனி**

இ.கஜனி-கனகரத்தினம் ம.ம. வித்தி, ச.சைலஜா-யாழ்.இந்து மகளிர் கல்லூரி, த.துஷாரகி-கொக்குவில் இந்துக் கல்லூரி.

**இசைகுழு 1**

கொக்குவில் இந்துக் கல்லூரி, முத்து தம்பி மகா வித்தி., கொக்குவில் இராமகிருஷ்ணா

**இசைகுழு 2**

கனகரத்தினம் ம.ம.வித்தி., கொக்குவில் இந்துக்கல்லூரி, பெரியபுலம் மகா வித்தியாலயம்

**நடனம் குழு 1**

யாழ். இந்துக் கல்லூரி, யாழ். இந்து ஆ.பா., கொக்குவில் இந்துக் கல்லூரி.

**நாட்டிய நாடகம் குழு 2**

கோட்ட மட்டத்தில் நடைபெற வில்லை வலயமட்டப் போட்டியில் பங்கு பற்றச் செய்யவும்

கனகரத்தினம் ம.ம.வித்தி.

**நாடகம்**

யாழ். இந்துக்கல்லூரி, கொக்குவில் இந்துக்கல்லூரி.

**வில்லுப்பாட்டு**

கொக்குவில் இந்துக் கல்லூரி, யாழ்.இந்துக்கல்லூரி.

**விவாதம்**

யாழ்.இந்துக்கல்லூரி, கனகரத்தினம் ம.ம.வித்தி, யாழ்.இந்து மகளிர் கல்லூரி.

**தமிழறிவு வினாவிடை**

யாழ்.இந்து மகளிர் கல்லூரி, கோண்டாவில் இந்து மகா வித்தி.

கோட்ட மட்டப் போட்டியில் முதலாம் இரண்டாம் இடத்தைப் பெற்ற போட்டியாளர்கள் வலய மட்டப் போட்டியில் பங்கு பற்ற ஆயத்த நிலை யில் இருக்குமாறு நல்லூர் கோட்டக்கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (அ)

## சான்றிதழ்களை பெற்றுக்கொள்ளுமாறு மாணவர்களுக்கு அறிவுறுத்தல்

யாழ்.பல்கலைக்கழக உயர்பட்டப் படிப்புகள் பீடத்தில் பயின்று பட்டம் பெற்றவர்களின் சான்றிதழ்கள் வழங்கப்படுகின்றன.

யாழ்.பல்கலைக்கழக உயர் பட்டப் படிப்புக்கள் பீடத்தில் கடந்த 2005 ஆம்ஆண்டு ஒக்டோபர் மாதத்துக்கு பின்னர் தமது கற்கை நெறிகளைப் பூர்த்தி செய்துகொண்ட மாணவர்கள் தங்களது பட்டச் சான்றிதழ்களை செவ்வாய்க்கிழமை, புதன் கிழமைகளில் உயர் பட்டப் படிப்புகள் பீடத்தின் அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம் என உயர் பட்ட ப் படிப்புகள் பீடாதிபதி கே. கந்தசாமி அறிவித்துள்ளார். (அ-5)

# இலங்கைப் பெண்ணை கடத்திய 3 பேர் கைது

சென்னை வில்லிவாக்கம், வடக்கு ஜெகநாதன் நகர் 7 ஆவது தெருவில் வசிப்பவர் ராஜேந்திரன், இவர் இலங்கையைச் சேர்ந்தவர்.

இவரது தம்பி மகள் மெரினா சுபேதினை(21) திங்கட்கிழமை காரில் வந்த மர்ம நபர்கள் 3பேர் கடத்திச் சென்றனர்.

இதுகுறித்து ராஜமங்கலம் பொலிஸ் இன்ஸ்பெக்டர் சந்திரஹாசன் வழக்குப் பதிவு செய்து தீவிர விசாரணை மேற்கொண்டார்.

விசாரணையில், சுபேதினை அவரது தாய் புஸ்பமாலின்(40) ஆலோசனைப் படி சொத்துக்காக திருமணம் செய்துகொள்ள இலங்கையைச் சேர்ந்த செல்வநேசன் (27)கடத் தியது தெரிய வந்தது.

இதையடுத்து செல்வநேசன், அவருக்கு துணையாக இருந்த தருமபுரி அகதிகள் முகாமைச் சேர்ந்த மரியன்குரூஸ்(30), செங்கல்பட்டு முகாமைச் சேர்ந்த ராஜிதாஸ் (25) ஆகியோரை பொலிஸார் கைதுசெய்தனர். கடத்தப்பட்ட சுபேதினையும் மீட்டனர். (அ-5)



யாழ்.நகர் மைய றோட்றக்ட் கழகம் 18ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மானிப்பாய் பிரதேச சபை மண்டபத்தில் க.பொ.த. சாதாரண தரப் பரீட்சையை எதிர்கொள்ளும் மாணவர்களுக்கு நடாத்திய கருத்தரங்கின் போது றொட்டரேரியன் தர்மகுலசிங்கம் மங்கல விளக்கேற்றி ஆரம்பித்து வைப்பதைப் படத்தில் காணலாம்.

# அஞ்ஞான இருளகற்றி மெய்ஞ்ஞான ஒளிபரவ
# திருக் கார்த்திகைத் தீபம் ஏற்றிடுவோம்

*சிறந்த கார்த்திகை கார்த்திகைத் தீபத்தால்*
*நிறைந்தவாறு நிலாமுகமண்டலம்*
*பிறந்து சாமுன்னொருதரம் பெட்புற*
*உறைந்து போற்றுநர்க் கோர்பிறப்பில்லையே*
(திருச்செந்தூர்ப் புராணம்)

கார்த்திகைத் தீபம் என்றும் சர்வாலய தீபம் என்றும் ஒவ்வொரு வருடமும் கார்த்திகை மாதத்தில் வரும் கார்த்திகை நட்சத்திரத்திலும், கார்த்திகை பௌர்ணமியிலும் சைவப் பெருமக்கள் ஆலயங்களிலும் வீடுகளிலும் இன்னும் தாங்கள் தொழில் புரியும் ஸ்தாபனங்கள் மற்றும் தாங்கள் புளங்கும் இடமெங்கும் தீபங்கள் ஏற்றிப் புற இருளகன்று எங்கும் தீப ஒளி பிரகாசிக்க இறைவனை வணங்கித் தங்கள் அக இருளும் அகல வேண்டுதல் செய்வார்கள்.

**இன்று திருக்கார்த்திகை விரதம், குமாராலய தீபம், சர்வாலய தீபம் இவற்றையொட்டி இக் கட்டுரை பிரசுரமாகின்றது.**

தீபத் திருநாளின் சிறப்புப் பற்றிக் கூறுமிடத்து பிரம விட்டுணுக்களின் கர்வத்தை நீக்கச் சிவபிரான் சோதி வடிவாகி அடி முடி தேடிய வரலாறும், மும் மலங்களாற் பீடிக்கப்பட்ட அசுரர்களின் முப்புரம் எரித்த வரலாறும் மக்கள் தம் அஞ்ஞானத்தை நீக்கி மெய்ஞ் ஞானத்தை உணர்த்த எடுத்துக் கூறப்பட்ட புராணங்களாகி எம்மை இருளினின்றும் வெளிச்சத்திற்குச் செல்ல வழி காட்டுவனவாயுள்ளன.

மேலும் கார்த்திகை தீப நன் நாளிலே மக்கள் இறைவனைச் சோதி வடிவிலே கண்டு தொழுவதாகவே 'சொக்கப்பானை' எனப்பெரும் தீப ஒளியை ஆலய வாசல்களிலே கொளுத்தி வழிபாடு செய்கின்றார்கள்.

சிவராத்திரி நன்நாளிலே பிரம விட்டுணுக்கள் சிவனைச் சோதி வடிவாகக் கண்டு வழிபட்ட அந்த அற்புத ஒளி வடிவத்தை மீண்டும் காட்டியருள வேண்டும் என்று வேண்டுதல் செய்ததனால், அக் காட்சியைத் திருக்கார்த்திகைத் தினத்திலே திருவண்ணாமலையிலே சோதி வடிவாகக் காட்சி கொடுத்ததாகவும், அதனாலே இன்றும் திருவண்ணாமலையிலே சிறப்பாகத் தீபங்கள் ஏற்றப்படுவதாகவும் அவ்வேளை மக்கள் தாங்கள் தங்கள் இடங்களிலெல்லாம் சிறப்பாக விளக்கேற்றி வழிபாடு செய்வதாகவும் கூறப்படுகின்றது.


சிறப்பு மிக்க தான தீபம் ஏற்றும் வழிபாடு உயர்ந்த ஆத்மீக சாதனையாகவும் பின்பற்றப் படுகின்றது.

*விளக்கினை ஏற்றி வெளியை அறிமின்*
*விளக்கின் முன்னே வேதனை மாறும்*
*விளக்கை விளக்கும் விளக்குடையார்கள்*
*விளக்கில் விளங்கும் விளக்கவர்தாமே*

என மிக அழகாகத் திருமூல நாயனார் எடுத்துக் கூறியுள்ளார்.

இதுமட்டுமன்றி சமண நூலாகிய சீவகசிந்தாமணியும் கார்த்திகை விளக்கீட்டைப் பற்றிச் சிறப்பாகப் பின்வருமாறு

*"தார்ப்பொலி தருமதத்தன்*
*தக்கவாறுரைப்பக் குன்றிக்*
*கார்த்திகை விளக்கிட்டனன்*
*கடிமகள் குவளைப் பைந்தார்*



*போர்த்ததன் கைலமெல்லாம்*
*பொன்னென முயர்த்து"* எனவரும் அடிகளால் எடுத்துக் கூறியிருப்பதிலிருந்து கார்த்திகை விளக்கீடு பல்லாண்டுகளாகவே எம்மவர்களாற் கொண்டாடப்படுவது அறியக் கூடியதாகவுள்ளது.

சிறப்புக்குரிய இத் தீபத் திருநாள் குமாராலய தீபம் என முருகப்பெருமான் ஆலயங்களிலும், சர்வாலய தீபம் என மற்றைய சைவாலயங்கள், வீடுகளிலும், விஷ்ணு ஆலய தீபம் என வைஷ்ணவ ஆலயங்களிலும் தீபங்கள் ஏற்றி வழிபாடுகள் நடாத்தப்படுகின்றன. இத் தீப வழிபாட்டின் மூலம் புற இருளகல அக இருளுமகற்றி நல்வாழ்வு காண்போமாக.

**நீர்வைமணி**

## க.பொ.த(சா/த) அனுமதி அட்டைகள்

க.பொ.த(சா/த)பரீட்சை-2007 பாடசாலை பரீட்சார்த்திகளின் அனுமதி அட்டைகளை அதிபர்கள் தத்தமது வலயங்களில் பெற்றுக் கொள்ள முடியுமென யாழ்ப்பாண வலயக் கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (அ-6)

## விண்ணப்பம் கோரல்

இலங்கை கணக்காய்வு சேவை கள் வகுப்பு II இன் தரம் II இல் கணக் காய்வு அத்தியட்சகர்களைச் சேர்ப்ப தற்கு கணக்காய்வாளர் தலைமை அதிபதித் திணைக்கள உத்தியோகத்தர்களுக்காக நடாத்தப்படும் மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை -2007க்கான விண்ணப்பம் கோரப் பட்டுள்ளது.

விண்ணப்பங்கள் 31.12.2007 அன்றோ, அதற்கு முன்னரோ கிடைக் குமாறு கணக் காய்வாளர் தலைமை அதிபதிக்கு கிடைக்கப் பெறும் வகை யில் பதிவுத் தபால் மூலம் அனுப்பி வைக்கப்படல் வேண்டும். இதற்கான பரீட்சை 2008 மார்ச் மாத இறுதி யில் கொழும்பில் நடாத்தப்படும்.

மேலதிக தகவல்களை 23.11. 2007 ஆம் திகதிய வர்த்தமானியிலோ அன்றி வலம்புரிக் காரியாலயத்திலோ பார்வையிடலாம். (அ-6)

* * *

நீதி, சட்ட மறுசீரமைப்பு அமைச்சினால் 'திடீர் மரண விசாரணை யாளர்' பதவிக்கான விண்ணப்பம் கோரப்பட்டுள்ளன. விண்ணப்பங்கள் 15.01.2008 அன்றோ அதற்கு முன்னரோ கிடைக்குமாறு, செயலாளர், நீதி சட்ட மறுசீரமைப்பு அமைச்சு, மீயுயர் நீதி மன்றக் கட்டடத்தொகுதி கொழும்பு-12 என்ற முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும். மேலதிக தகவல்களை 23.11.2007 ஆம் திகதிய வர்த்மானியிலோ அன்றி வலம்புரிக் காரியாலயத்திலோ பார்வையிடலாம். (அ-6)

# 'மாணவர்கள் நேரத்தை வீணாக்கக்கூடாது'
# பட்டமளிப்பு விழாவில் ஸ்ரீ சத்ய சாயிபாபா

புட்டபர்த்தியில் சத்திய சாயி பல்கலைக்கழக பட்டமளிப்பு விழாவில் சாயிபாபா பேசியதாவது,

காலையில் எழுந்ததும் பணம், பணம் என மக்கள் அலைகிறார்கள். இப்படிப் பொருளைத் தேடி நேரத்தை ஏன் வீணடிக்கிறீர்கள்.

இன்று நாம் பணத்திற்காக அலைவதால் நமது திறமை வெகுவாகப் பாதிக்கப்படுகிறது. நேரம் நிலையானது. காலம் மாறவில்லை. ஆனால் நாம் தான் மாறிப்போயிருக்கிறோம்.

நேரத்தை வீணடிப்பதன் மூலம் வாழ்க்கையை வீணடிக்கி றோம். மாணவர்களாகிய நீங்களே எதிர்காலத் தலைவர்கள்.

ஒவ்வொரு மனிதனுக்கும் குறிக்கோள் வேண்டும். ஆனால் மாணவர்களின் குறிக்கோளுக்கென ஒரு வரையறை இருக்கிறது.

மனிதனுக்கு ஆசைகள் ஒன்றன் பின் ஒன்றாக வளரும் அதை அடக்க நீங்கள் பழகவேண்டும். இதுவே உங்கள் குறிக்கோளாக அமைய வேண்டும். நீங்கள் அனைவருக்கும் முன்னுதாரணமாக திகழுங்கள். நீங்கள் கல்லூரியை விட்டு வெளியே சென்றதும் ப்ணத்தை எப்படி செலவழிக்க வேண்டும் என்பது முக்கியம். இந்த பல்கலைக்கழக மாணவர்களுக்கு அதைச் சொல்லித் தெரியவேண்டியதில்லை. உங்கள் ஆன்



மாவை சேவைக்காக ஒப்படையுங்கள். மேலும் உங்கள் உடல் நலமும் மிக மிக முக்கியம். ஒருவனை யார் எனக் கேட்டால் 'நான்' எனப் பதில் சொல்வான். 'நான்' என்ற இந்த உடல் இன்று இருக்கும், நாளை இருக்காது. இது, கடவுள் உங்களுக்கு தந்த பரிசு எனவே உடலின் மீது கவனம் வைத்து அதைப் பத்திரமாக கடவுளிடம் ஒப்படைக்க வேண்டும்.

சில சமயங்களில் நாம் அடிப்படை கடமைகளை மறந்துவிடுகிறோம். அதனால் பல பிரச்சினைகளை சந்திக்கிறோம். கடவுளிடம் உங்களை ஒப்படைத்துவிடுங்கள். கடவுள் உங்களிடமே இருக்கிறார். நீங்களே கடவுள்.

கடவுள் உங்கள் பின்னால் உள்ள போது, உங்களுக்கு என்ன கவலை அவர் ஒளிமயமானவர். பகவான் உலகம் முழுவதுமுள்ள கோடிக் கணக்கான மக்களை பாதுகாக்கிறார். உலகம் முழுமையும் ஒற்றுமையாக இருக்க விரும்புகிறார்.

நமது விருப்பங்கள் கடவுளின் விருப்பமின்றி நிறைவேறுவதில்லை. கடவுளே நமக்கு தாய் தந்தை எல்லாம். பல மதங்கள் இருந்தாலும் அவை ஓரிடத்திலேயே கூடுகின்றன. அன்பை யும், விசுவாசத்தையுமே அவை வலியுறுத்து கின்றன.


அன்பும், உண்மையுமே கடவுள் என நான் சொல்கிறேன். ஏனெனில், உண்மை அழிவதில் லை. கல்வியைச் சரிவரக் கற் காதவன் வாழ்க்கையில் எல்லா வற்றையும் இழக்கிறான்.

நீங்கள் பகைமை பிரிவினையை மறந்து ஒற்றுமையைக் காக்க வேண்டும்.

நீங்கள் கல்லூரித் தேர்வை முடித்துவிட்டீர்கள். வாழ்க்கைத் தேர்வை எழுதப்போகிறீர்கள். மனதை நல்ல வழியில் செலுத்துங்கள். சமூகத்தில் நற்பெயர் எடுக்கவேண்டும்.

மாணவர்கள் நன்றாகப் படித்து பெற்றோரை மகிழ்ச்சிய டையச் செய தால் பக வானும் மகிழ்ச்சியடை வார் இவ்வாறு அவர் பேசினார்.

## மனித அசைவுடன் ரோபோ



(சிட்னி)

ஹோண்டா நிறு வனம் கடந்த 21 ஆண்டுகளாக ஆராய்ச்சி மேல் ஆராய்ச்சி நடத்தி மனிதனின் ஒவ்வொரு அசைவைப் போலவே செய்யக் கூடிய வகையில் தயாரித்த ரோபோ இது. பெயர் அசிமோ.

அதாவது செயல் பாட்டில் மிக நவீன கண்டுபிடிப்பு (அட்வான்ஸ்டு ஸ்டெப் இன் இன்னோவேடிவ் மொபிலிடி) என்பதன் ஆங்கிலச் சுருக்கம் தான் அசிமோ.

மனித உடலின் சாதாரண இயக்கங்களைச் செய்யக் கூடிய இந்த ரோபோவை உலக அரங்கில் அறிமுகம் செய்ய வெளி நாடுகளில் ஹோண்டா நிறுவனம் தொடர் சுற்றுலாவை ஏற்பாடு செய்துள்ளது. அவுஸ்திரேலியாவின் சிட்னி நகருக்கு வந்த அசிமோ அங்கு ஒரு பெண்ணுடன் கைகுலுக்குகிறது. (அ-5)

# பொதுநலவாயத்திலிருந்து பாகிஸ்தான் நீக்கம்

(கம்பாலா)

பாகிஸ்தானில் அவசரகாலச் சட்டம் பிறப்பிக்கப்பட்டதைத் தொடர்ந்து பொது நலவாய அமைப்பிலிருந்து அந்த நாடு இடை நிறுத்தப்பட்டுள்ளது. இதற்கான முடிவு கம்பாலாவில் நடைபெற்ற பொது நலவாய அமைச்சர்கள் குழுக் கூட்டத்தில் மேற்கொள்ளப்பட்டது.

அவசர நிலையை 10 நாட்களுக்குள் திரும்பப் பெற வேண்டும் என்ற பொது நலவாய அமைப்பு விதித்திருந்த கெடு முடிவடைந்ததைத் தொடர்ந்து இந்த முடிவு மேற்கொள்ளப்பட்டதாக பொதுச் செயலாளர் டான் மெக்கின்னான் செய் தியாளர்களிடம் தெரிவித்தார்.

2ஆண்டுகளுக்கு ஒரு முறை நடைபெறும் பொதுநலவாய நாடுகளின் தலைவர்கள் மாநாடு கம்பாலாவில் நேற்று தொடங்கியது. இந்தக் கூட்டத்திற்கு முன்பாக பாகிஸ்தான் பிரச்சினை குறித்து 9 உறுப்பு நாடுகளின் வெளியுறவு அமைச்சர் பங்கேற்ற சிறப்புக் கூட்டம் நடைபெற்றது.

பாகிஸ்தானில் ஜனநாயகம் திரும் புவதற்காக பல்வேறு நடவடிக்கை களைஅந்நாட்டுஅதிபர்பர்வேஸ் முஷா ரப் மேற்கொண்டு வரும் போதி லும் அங்கு பொதுநலவாய அடிப்படை விழுமியங்கள் மீறப்பட்டுள்ளதாக மெக்கின்னான் கூறினார்.

கடந்த 1999 ஆம் ஆண்டு நவாஸ் ஷெரீப் தலைமையிலான அரசை அப்போதைய இராணுவ தளபதி முஷா ரப் கலைத்து விட்டு ஆட்சிப் பொறுப்பை ஏற்றபோது பொதுநலவாய அமைப்பிலி ருந்து இடைநிறுத்தம் செய்யபட்டமை குறிப்பிடத்தக்கது.

(அ-5)

## உலக தரிசனம்

# இந்தோனேஷியாவில் இன்று நிலநடுக்கம்
# சுனாமி பீதியில் மக்கள் ஓட்டம்

இந்தோனேஷியாவில் கடந்த 2004 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் ஏற்பட்ட பூகம்பம் மற்றும் சுனாமி பேரலைகள், பேரழிவை ஏற்படுத்தியது. இந்தியா உட்பட பல்வேறு நாடுகளில் 2இலட்சம் பேர் பலியானார்கள். இதை அடுத்து அடிக்கடி அங்கு நில நடுக்கம் ஏற்பட்டு மக்களை பீதிக்குள்ளாக்கி வருகிறது.

நேற்று காலை இந்தோனேஷியா வின் சுமத்ரா தீவுப் பகுதியில் திடீர் என்று நிலநடுக்கம் ஏற்பட்டது. கடலுக்கு அடி யில் 16 கி.மீ. ஆழத்தில் இந்த நில நடுக் கம் உருவானது. இது 6 ரிக்டர் அளவாகப் பதி வானது.

இந்த நில நடுக்கத்தால் வீடு கள், கட்டடங்கள் குலுங்கின. வீடுகளில் இருந்தவர்கள் அலறி அடித்துக் கொண்டு வெளியே ஓடினார்கள். சுனாமி பீதியில் கடலோரப் பகுதிகளில் உள்ளவர்கள் மேடான பகுதியை நோக்கி ஓடினார்கள்.

இந்த நில நடுக்கத்தால் உயிர் இழப் புகள் ஏதும் ஏற்பட்டதா என்பது குறித்து அரசுதகவல்களை சேகரித்து வருகிறது. (அ-5)

# வெற்றிக்கு ஏங்கும் மேற்கிந்திய தீவுகள்

கிரிக்கெற்றின் ஆரம்ப காலங்களில் மற்ற அணிகளை புரட்டியெடுத்த மேற்கிந்திய தீவுகள் அணி தற்போது அன்னிய மண் வெற்றிக்காக ஏங்கித்தவிக்கிறது. 21ம் நூற்றாண்டில் அன்னிய மண்ணில் விளையாடிய 41 டெஸ்டில் மேற்கிந்திய தீவுகள்அணி ஒரு வெற்றியை மட்டுமே பதிவு செய்து மோசமான டெஸ்ட் அணியாக உள்ளது.

1960 , 70 களில் டெஸ்டில் சிறப்பாக செயல்பட்டு , எதிரணிகளை மிரட்டிய மேற் கிந்திய தீவுகளின் நிலைமை தற்போது மிகவும் மோசமாக இருக்கிறது. அதுவும் அன்னிய மண்ணில் நடக்கும் போட்டிகள் என்றால் மேற்கிந்தியதீவுகள் திணறிவிடுகிறது. லாரா போன்ற ஜாம்பவான்கள் இருந்தும் கரீபிய வீரர்களால் அன்னிய மண்ணில் ஜொலிக்க முடியவில்லை.

மேற்கிந்திய தீவுகள் இந்த நூற்றாண்டில் அன்னிய மண்ணில் 41 டெஸ்ட் போட்டிகளில் பங்கேற்றுள்ளது. இதில் ஒரே ஒரு போட்டியில் மட்டுமே வெற்றியை ருசித்துள்ளது. 6 போட்டிகளை கடும் போராட்டத்துக்கு பின் சமன் செய்துள்ளது. 34 முறை மோசமான தோல்வியை சந்தித்துள்ளது. இந்த நூற்றாண்டில்அன்னிய மண்ணில் படுமட்டமாக விளையாடிய அணி என்ற அவப்பெயரை பெற்றுள்ளது.

**2000 ஆம் ஆண்டு முதல் அன்னிய மண்ணில் அணிகளின் செயல்பாடு**

| அணி | போட்டி | வெற்றி | தோல்வி | சமன் | விகிதம் |
|---|---|---|---|---|---|
| ஆஸி. | 39 | 27 | 8 | 4 | 3.37 |
| தெ.ஆ. | 38 | 11 | 15 | 12 | 0.73 |
| இங்கிலாந்து | 42 | 12 | 18 | 12 | 0.67 |
| இந்தியா | 37 | 9 | 14 | 14 | 0.64 |
| பாகிஸ்தான் | 37 | 11 | 18 | 8 | 0.61 |
| இலங்கை | 29 | 6 | 16 | 7 | 0.37 |
| நியூசிலாந்து | 22 | 1 | 11 | 10 | 0.09 |
| மே.தீ. | 41 | 1 | 34 | 6 | 0.02 |

**அதிரடி அவுஸ்திரேலியா:-**

இவ்வரிசையில் அவுஸ்திரேலியா, தென் ஆபிரிக்கா மற்றும் இங்கிலாந்து முதல் மூன்று இடத்தை பிடித்துள்ளன. அவுஸ்ரேலியா அன்னிய மண்ணில் 39 போட்டியில் பங்கேற்று 27 இல் வெற்றியை தன்வசப் படுத்தியுள்ளது. 8 முறைமட்டுமே தோல்வியடைந்துள்ளது. நான்கு போட்டி சமன் ஆகியுள்ளது. டெஸ்டில் அதிரடி காட்டும் ஒரே அணி அவுஸ்திரேலியா தான்.

**இழுத்தடிக்கும் இந்தியா:-**

டெஸ்ட் போட்டிகளில் அவுஸ்திரேலியாவுக்கு நேர்மாறாக இந்தியா உள்ளது. போட்டியை இழுத் தடிப்பதில் இந்திய வீரர்களுக்கு நிகர் யாருமில்லை என்றே சொல்லலாம். இந்த நூற்றாண்டில் அதிக டெஸ்ட் போட்டிகளை சமன் செய்த நாடு இந்தியா தான். 37 போட்டிகளில் பங்கேற்று 9வெற்றி , 14 தோல்வி , 14 சமன் செய்துள்ளனர்.

# மகுடம் கிடைக்காத மன்னர்கள்!

**விளையாட்டு**

- அமிர்தன்

ஒருநாள் போட்டி என்றால் யுவராஜ் , சேவாக், அப்ரிடி போன்ற அதிரடி மன்னர்களுக்கு சிவப்பு கம்பள வரவேற்பு தருகிறார்



கள். அதுவே டெஸ்ட் என்றால் 'நோ சான்ஸ்' என்கிறார்கள். இவர்கள் வாண வேடிக்கை காட்டும் போது, மந்தமான டெஸ்ட் போட்டிகூட பரபரப்பானதாக மாறி விடுகிறது என்பதை கணிக்க தேர்வாளர்கள் மறந்து விடுகின்றனர். இவர்களில் சேவாக் நிலைமை தான் மிகவும் பரி தாபம் முல்தான் டெஸ்டில் 309 ஓட்டங்கள் குவித்து திறமை நிரூபித்த போதும், தற்போதைய பாகிஸ்தான் தொடரில் புறக்கணிக்கப்பட்டுள்ளார். இந்த நிலைமை க்கு என்ன காரணம் என்று பார்ப்போமா...

கிரிக்கெற்றில் இரண்டு விதமாக வீரர்கள் தேர்வு செய்யப்படுகின்றனர். ஒருநாள் மற்றும் இருபது-20 போட்டிக்கு அதிவிரைவாக ஓட்டம்



சேர்க்கும் திறமை படைத்தவர்களுக்கு வாய்ப்பு அளிக்கப்படுகிறது. அதே நேரத்தில் டெஸ்ட் போட்டிக்கு நிதானமாக ஆடும் ஆற்றல் படைத்தவர்கள் இடம் பெறுகின்றனர்.

**சேவாக் பரிதாபம்:**

இதில் நட்சத்திர துடுப்பாட்ட வீரர் சச்சின், கங்குலி, தோனி போன் றவர்கள் அனைத்து விதமான போட்டிக்கும் தகுதியான வர்களாக இருக்கின்றனர். இவர்களது வரிசையில் சேவாக்கும் இடம்பெற்றிருந்தார். டெஸ்ட் , ஒரு நாள் போட்டி என்ற வேறுபாடு இல்லாமல் அதிரடியாக விளையாடி வந்தார். உதாரணமாக 2004 இல் முல்தானில் நடந்த பாகிஸ்தா னுக்கு எதிரான டெஸ்ட் போட்டியில் சிக்சர் அடித்து 300 ஓட்டங்களை தொட்டார் என்றார் பார்த்துக் கொள்ளுங்கள். மொத்தம் 309 ஓட்டங்கள் எடுத்து இவர் ஒரே இன்னிங்சில் அதிக ஓட்டம் எடுத்த இலட்சுமண் (281)சாதனையை தகர்த்தார். தவிர பாகிஸ்தானுக்கு எதிராக 9 போட்டிகளில் 1, 276 ஓட்டடங்கள் (சராசரி 91.14 ஓட்டம் எடுத்துள்ளார். இதுவரை 52 டெஸ்ட் போட்டிகளில் விளையாடியுள்ள சேவாக் 4, 155 ஓட்டம் (சராசரி 49.56) எடுத்துள்ளார். இப்படி சாதனை வீரராக இருந்த போதும், 'போர்ம்' இல்லை என்ற காரணம் காட்டி தற்போதைய பாகிஸ்தான் டெஸ்ட் தொட ரில் இருந்து நீக்கியுள்ளனர்.

இவர் இல்லாத தால் இம்முறை இந் திய அணி அதிரடி ஆரம்பம் கிடைக்காமல் திணறலாம்.



**யுவராஜ் தவறு :-** அடுத்து யுவராஜ் நிலைமை மிகவும் வேடிக்கையானது. சமீபத்திய பாகிஸ்தானுக்குஎதிரான5போட்டிகள்கொண்ட ஒரு நாள் தொடரில் 272 ஓட்டங்கள் (சராசரி 68.00) விளாசி சூப்பர் போர்மில் உள்ளார். டெஸ்ட் தொட ருக்கான அணியில் இடம் பெற்ற போதும், விளையாடும் லெவனில் வாய்ப்பு தர மறுக்கிறார்கள். இதுவரை 195 ஒருநாள் போட்டிகளில் பங்கேற்றுள்ள 25 வயதான யுவராஜ், வெறும் 19 டெஸ்டில் தான் விளையாடியுள்ளார். இவருக்கு பதிலாக 33 வயதான இலட்சு மணை தேர்வு செய்கிறார்கள். இதன் மூலம் திறமை வாய்ந்த இளம் வீரரை புறக்கணிப் பதாக ஜாம்பவான் கபில்தேவ் உள்ளிட்ட பலர் வெளிப்படையாகவே விமர்சித் துள்ளனர்.

**அப்ரிடி சிக்கல்**

இந்திய வீரர்களை போல பாகிஸ்தானின் அதிரடி நாயகன் அப்ரிடியும் டெஸ்ட் போட்டிகளில் தொடர்ந்து வாய்ப்பு மறுக்கப்படுகிறார். சமீபத்திய இந்திய தொடரில் இருந்து கழற்றி விடப்பட்ட இவர் 249 ஒருநாள் போட்டிகளில் பங்கேற்றுள்ளார். அதே நேரத்தில் 26 டெஸ்ட் போட்டிகளில் தான் விளையாடியுள்ளார். இவரை போன்ற விளாசல் வீரரை நீக்குவதால் டெஸ்ட் போட்டிக்கான விறுவிறுப்பு குறைந்து போகிறது.

இப்படி இந்தியா , பாகிஸ்தான் அணிகள் அதிரடி வீரர்களை புறக்கணித்த போதும், இலங்கை மட்டும் நிதான போக்கை கடைப் பிடித்தது. ஜெயசூர்யாவுக்கு தொடர்ந்து வாய்ப்பு அளித்தது. இவரும் தேர்வாளர்களின் நம்பிக் கையை காப்பாற்றினார். ஒருநாள் போட்டிகள் போலவே டெஸ்ட் தொடரிலும் முத்திரை பதித் தார். 109 டெஸ்டில் 14 சதங்கள் உட்பட 6, 885 ஓட்டங்கள் எடுத்துள்ளார். இதே போல் அவுஸ் திரேலியாவின் கில்கிறீஸ்ட்டுக்கும் டெஸ்ட் வாய்ப்பு மறுக்கப்படவில்லை. வழக்கம் போல் டெஸ்ட் போட்டிகளிலும் அதிரடி காட்டினார். இவர்களை போல திறமை வாய்ந்த அதிரடி வீரர்களுக்கு டெஸ்ட் போட்டிகளில் தொடர்ந்து வாய்ப்புத் தரவேண்டும். அப்போது தான் டெஸ்ட் போட்டிகள் சுவாரஸ்யமானதாக மாறும். போட்டியை காண வரும் ரசிகர்களின் எண்ணிக்கையும் உயரும் என்பதை தேர்வாளர்கள் உணர வேண் டும்.

# மோதலுக்கு தயாராகும் ஐ.சி.எல்.

பல தடைகளைத் தாண்டி கிரிக்கெற் அரங்கில் சாதிக்க துடிக்கும் இந்தியன் கிரிக்கெற் லீக் (ஐ.சி.எல்) அமைப்பு தனது முதல் இருபது -20 தொடரை விரைவில் அரங்கேற்றவுள்ளது. சமீபத்தில் மேற்கிந்திய தீவுகளில் நடந்த உலக



கோப்பை (50 ஓவர்) போட்டியில் இந்திய கிரிக்கெற் அணி மிக மோசமாக செயல்பட்டது. இதனால் இந்திய கிரிக்கெற் சபை மற்றும் அதன் செயல்பாடுகளின் மீது அதிருப்தி அடைந்த கபில் தேவ் உள்ளிட்ட சில முன்னாள் வீரர்கள் இந்தியன் கிரிக்கெற் லீக் அமைப்புக்கு அடித் தளம் அமைத்தனர்: விறுவிறுவென வளர்ச்சி கண்ட இவ்வமைப்பு, 'ஜீ.' டிவியின் ஆதரவில் முழுமை பெற்றது.

மூன்று ஆண்டு ஒப்பந்தத்தின் கீழ் வீரர்களுக்கு ரூ.30 இலட்சம் முதல் 3 கோடிவரை சம்பளம் தர முன்வந்த இந்தியன் கிரிக்கெற் லீக் அமைப்பில் இந்திய அணியில் வாய்ப்பு பெற முடியாத உள்நாட்டு வீரர்கள் சுமார் 50 பேர் அதிரடியாக இணைந்தனர். இவர்கள் தவிர ஓய்வுபெற்ற மற்றும் ஓய்வை எதிர் நோக்கி இருந்த பாகிஸ்தானின் இன்சமாம், ரசாக் ,மேற்கிந்திய தீவுகளின் பிரைன் லாரா, இலங்கையின் அத்தப்பத்து ,நியூசிலாந்தின் அஸ்ரில் , கிறிஸ் ஹரிஸ் உள்ளிட்ட பல பிரபலங்களும்தங்களை இவ்வமைப்பில் இணைத்துக்கொண்டனர். இதன் சார்பில் இருபது-20 கிரிக்கெற் தொடர் நடத்தப்பட்டு வெற்றிபெறும் அணிக்கு பரிசுத் தொகையாக ரூ.4 கோடியும் வழங்கப்படவுள்ளது.

**பி.சி.சி.ஐ. அதிரடி:**

இந்திய உள்நாட்டு வீரர்கள் மற்றும் அன்னிய வீரர்கள் சிலர் இந்தியன் கிரிக்கெற் லீக்கில் இணைவதை இந்திய கிரிக்கெற் சபை (பி.சி.சி.ஐ.) கடுமையாக எதிர்த்தது. இதன் மூலம் தங்களுக்கு நெருக்கடி ஏற்பட்டு விடும் என இந்திய கிரிக்கெற் சபை அச்சம் கொண்டது. இதற்கு முடிவு கட்டவும், இந்தியன் கிரிக்கெற் லீக் அமைப்பை ஒழித்துக்கட்டவும் இந்தியன் பிரிமியர் லீக் (ஐ.பி.எல்) என்ற அமைப்பை ஏற்படுத்தி அதற்கு சர்வதேச அளவில் வரவேற்பையும் பெற்றது. இந்திய நட்சத்திர துடுப்பாட்ட வீரர் சச்சின் முதல் அவுஸ்திரேலியாவின் மெக்ராத் வரை பல முன்னணி வீரர்கள் இதில் இணைந்துள்ளனர்.

**வருவாரா லாரா?:**

இந்திய கிரிக்கெற் சபை யின் பதிலடியால் ஆடிப்போனது கிரிக்கெற் லீக். வீரர்கள் பலரும் அவசரப்பட்டு இணைந்து விட்டோமா என எண்ணத்துவங்கினர். கிரிக் கெற் லீக்கில் முதல் ஆளாக தன்னை இணைத்துக் கொண்ட மேற்கிந்திய தீவுகள் வீரர் லாரா கிரிக்கெற் லீக் சார்பில் நடக்கும் இருபது-20 தொடரில் விளையாடுவரா? இல்லையா? என்பது இதுவரை சந்தேகத்துக்கு இடமாகவே உள்ளது.

**சாதிக்குமா ஐ.சி.எல்?:**

இந்தியன் கிரிக்கெற் லீக் அமைப்பின் சார்பில் இருபது-20 கிரிக் கெற் தொடர் வரும் 30 ஆம் திகதி ஆரம்பமாகிறது. சென்னை




சூப்பர் ஸ்டார்ஸ், மும்பை சாம்ப்ஸ், சண்டிகர் லயன்ஸ், ஐதராபாத் ஹீரோஸ், கொல்கட்டா டைகர்ஸ் மற்றும் டில்லி ஜெட்ஸ் என ஆறு அணிகள் இத்தொடரில் பங்கேற்கின்றன. ஒவ்வொரு அணியிலும் ஐந்து முதல் ஆறு சர்வதேச வீரர்கள் இடம்பெற்றுள்ளனர். தொடரில் பங்கேற்கும் வீரர்களுக்கான 10 நாள் கொண்ட பயிற்சி முகாம் சென்னை மற்றும் ஐதராபாத்தில் தற்போது நடந்து வருகிறது. இந்தியன் கிரிக்கெற் சபையின் சவால்களை முறியடித்து தொடரில் களமிறங்கும் இவ்வமைப்புக்கு சர்வதேச அளவில் எதிர்பார்த்த வரவேற்பு கிடைக்குமா? இந்திய ரசிகர்கள் இப்போட்டிகளை ரசிப்பார்களா? இவற்றுக்கு பதிலளிக்க வேண் டிய நிர்பந்தத்தில் உள்ளது இந்தியன் கிரிக்கெற் லீக்.

வஞ்சக எண்ணம் கொண்ட அயலவன்—ஒரு கண்ணால் அழுவான்; மறுகண்ணால் சிரிப்பான்.
— போர்த்துக்கல்

வலம்புரி

# இலங்கைத் தமிழரை ஏமாற்றும் இந்தியாவின் ஆலோசனை

அதிகாரப் பகிர்வுத்திட்டத்தை அமுல்படுத்துமாறு இலங்கை அரசை இந்தியா வலியுறுத்தியுள்ளதாக செய்திகள் வெளிவந்துள்ளன.

இந்திய வெளிவிவகார அமைச்சர் பிரணாப் முகர்ஜி, இலங்கை வெளிவிவகார அமைச்சர் ரோகித போகொல்லாகமவிடம் இதை வலியுறுத்தி உள்ளார்.

அதிகாரப் பரவலாக்கல் மூலமாக இனப்பிரச்சினைக்கு தீர்வு காணுமாறு இந்தியா வலியுறுத்துவது உலக நாடுகளையும் இலங்கைத் தமிழர்களையும் ஏமாற்றும் நோக்குடையதேயன்றி அதற்குள் உண்மைத்தன்மை ஏதுமில்லை. இலங்கை இனவாதத்தில் இந்தியாவின் பங்களிப்பு போரை முன்னெடுப்பதற்கானதேயன்றி சமாதானத்தை முன்னெடுப்பதற்கானதல்ல.

இதனை உறுதி செய்வதற்கு இந்தியா இலங்கைக்கு வழங்கி வரும் ஆயுதங்கள் போதுமானவையாகும். இலங்கை அரசு இந்தியாவிடமன்றி ஏனைய நாடுகளிடம் ஆயுதங்களை கொள்வனவு செய்யக் கூடாதெனவும் தற்பாதுகாப்புக்கான ஆயுதங்களையே இந்தியா வழங்கும் எனவும் அந்நாட்டு பாதுகாப்பு ஆலோசகர் நாராயணன் தெரிவித்திருந்தார்.

நாராயணனின் கருத்து இருநாட்டு அரசியலிலும் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியிருந்தது. இந்தியா, இலங்கையின் இறையாண்மையில் ஆதிக்கம் செலுத்துவதாக ஜே.வி.பி., ஹெல உறுமய போன் கட்சிகள் கோஷமிட்டன.

பாதுகாப்பு ஆலோசகர் நாராயணன் மேற்படி கருத்தை கூறும்போது இந்திய ஆயுதக் கப்பலில் இருந்து இலங்கை துறைமுகத்தில் பாரிய ஆயுதங்கள் இறக்கப்பட்டன.

ஆக நாராயணனின் மேற்படி கருத்து உலகையும் இலங்கைத் தமிழ் மக்களையும் ஏமாற்றும் நோக்குடையது என்பது இதிலிருந்து நிரூபணமாகின்றது.

இந்திய நிதியமைச்சர் ப.சிதம்பரம் அண்மையில் இலங்கைக்கு வந்தபோது விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தி இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண வேண்டுமென அரசுக்கு ஆலோசனை கூறியிருந்தார்.

உலகில் மிகவும் இலகுவானதும்—இலவசமானதுமாக் இருப்பது ஆலோசனை ஒன்றுதான். இதனை இந்திய நிதியமைச்சர் தான் கூறவேண்டுமென்றில்லை. யார்வேண்டுமானாலும் அதனைச் செய்யலாம்.

ஆனால் இலங்கையைப் பொறுத்தவரை அங்கு ஆலோசனை—அறிவுரை செல்லாக்காசாகிவிட்டது. எனவே இலங்கையில் இனப்பிரச்சினை தீர வேண்டுமெனில் அங்கு ஓர் இறுக்கமான முடிபு தேவை, கண்டிப்பான உத்தரவு தேவை.

இது இந்தியாவுக்கு நன்கு தெரியும். எனினும், இலங்கைக்கு மறைமுகமாக ஆயுதங்களை விநியோகிக்கும் அந்த நாட்டினால் ஆலோசனையை மட்டுமே உரக்கக் கூறமுடியும்.

இதற்கு மேலாக அமெரிக்கா போன்ற நாடுகள் இலங்கைக்கு ஆயுதம் வழங்குவதையும் இந்தியா மறைமுகமாக ஆதரிக்கின்றதென்பதை மறுப்பதற்கில்லை. இந்த அடிப்படையில் நோக்கினால், பாதுகாப்பு ஆலோசகர் நாராயணனின் கருத்து இலங்கை அரசை காப்பாற்றும் நோக்கில் அமைந்ததென்பதை புரிந்துகொள்ள முடியும்.

அதாவது இலங்கை, அமெரிக்காவிடமும் பாகிஸ்தானிடமும் ஆயுதக்கொள்வனவை செய்வது தெரிந்திருந்தும் தானும் ஆயுதங்களை வழங்குகின்றதெனில் இந்தியாவின்நோக்கம் இலங்கை அரசுக்கு சார்பானதென்பது சரியான முடிபேயாகும்.

# சந்தர்ப்பத்துக்கு ஏற்ப கட்சிமாறி சலுகைகளை பெற வேண்டிய அவசியம் கூட்டமைப்புக்கு இல்லை

## சபையில் கனகரட்ணம் எம்.பி.சாடல்

சந்தர்ப்பத்திற்கு ஏற்ப கட்சிமாறி அரசியல் சலுகைகளை பெற வேண்டிய அவசியம் தமிழ்த் தேசிய கூட்டமைப்புக்கு இல்லை என்று கூட்டமைப்பின் வன்னி மாவட்ட எம்.பி.எஸ். கனகரட்ணம் சபையில் தெரிவித்தார். தமிழர்களின் இறைமையுடன் கூடிய சுயநிர்ணய உரிமையை உறுதிப்படுத் துவதே எமது பிரதான இலக்கு என்றும் அவர் கூறினார்.

வரவு செலவுத்திட்ட மூன்றாம் வாசிப்பு மீதான மூன்றாம் நாள் விவாதத்தில் உரையாற்றிய கனகரட்ணம் எம்.பி.மேலும் கூறியதாவது,

உங்களைப் போல அங்கிருந்து இங்கு வருவதும் இங்கிருந்து அந்தப்பக்கம் செல்வது எமது பழக்கம் அல்ல. அவ்வாறான கேவலமான அல்லது பணத்தை, சலுகைகளை எதிர்பார்த்து செயற்படும் அரசியல் நடவடிக்கைகள் எமக்கு தேவையில்லை. நீங்கள் ஜனநாயகம் என்று கூறிக்கொண்டு மக்களின் இறைமையை விலை பேசுகின்றீர்கள். அரசியலை நகைச்சுவையாக்குகின்றீர்கள்.

எங்களுக்கு அவ்வாறான மனச்சாட்சிக்கு விரோதமான அரசியலை செய்ய முடியாது. எமது மக்களின் கடந்த 50 ஆண்டு கால போராட்டம் அந்த போராட்டத்தின் புனிதத்தை நாங்கள் மதிக்கின்றோம். பாராளுமன்ற அரசியலுக்குள் இருந்து கொண்டு மக்களை ஏமாற்றி நாட்டை குட்டிச்சுவராக்கும் இந்த கேவலமான அரசியலிலிருந்து விடுபட்டு நேர்மையுடன் செயற்படுகிறோம்.

நாட்டு மக்கள் வெட்கப்படும் அளவுக்கு உங்கள் அரசியல் நடவடிக்கைகள் அமைந்துள்ளன. ஆனால் அது உங்களுக்கு புரியவில்லை. புலிகளை இராணுவ ரீதியாக வெற்றி கொண்டு வருவதாக நீங்கள் அரசு பெருமை கொண்டாடுகின்றீர்கள். ஆனால், உங்கள் பெருமை தற்காலிகமானது என்பதை மிக விரைவில் அறிந்து கொள்வீர்கள்.

போராட்டங்களின் தந்திரோபாயங்களை அறியாமல் வெறுமனே அரசியலுக்காக பேசி சிங்கள மக்களை ஏமாற்றி வருகின்றீர்கள். காலம் காலமாக இதனையே செய்து வருகின்றீர்கள்.(அ-5)

# தலையிருந்தும் மூளை இல்லாத திட்டமாகும்

## ஜே.வி.பி.எம்.பி நவரத்ன பண்டார கிண்டல்

சமர்ப்பிக்கப்பட்டுள்ள வரவு—செலவுத்திட்டத்தில் வரவு, செலவு, ஆதியம், கடன், பற்றாக்குறை எல்லாம் குறிப்பிடப்பட்டிருந்த போதும் திட்டங்கள் எதுவுமே குறிப்பிடப்பட வில்லை. அதாவது தலையிருந்தும் மூளையில்லாத திட்டமா கும். அதனால் தான் விமர்சனம் செய்ய வேண்டியுள்ளது என்று ஜே.வி.பி.பாராளுமன்ற உறுப் பினர் நவரத்ன பண்டார தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நடைபெற்ற வரவு—செலவுத்திட்ட மீதான குழுநிலை விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் தொடர்ந்து உரையாற்றுகையில் மேலும் கூறியதாவது,

வரவு—செலவு திட்டம் சமர்ப்பிக்கப்படுவதன் மூலம் மக்களுக்கு ஏதாவது கிடைக்கவேண்டும். அதற்காக முன்மொழியப்படவேண்டும். எனினும் அவற்றையெல்லாம் விட்டுவிட்டு அமைச்சர்களை பாதுகாப்பதற்கான திட்டமாகவே கருதுகின்றோம். இந்த திட்டத்திற்கு கை, கால், உடம்பு ஏன் தலைகூட இருக் கின்றது. எனினும் மூளை இல்லை என்பதனால் தான் ஊழல் மோசடிகளில் ஈடுபட்டவர்களை பாதுகாப்பதற்கான நடவடிக் கைகளே முன்னெடுக்கப்படுகின்றன. ஊழல், மோசடிகளை ஜே.வி.பி எதிர்த்து விமர்சிக்குமே தவிர ஆதரவு வழங்காது.

அவ்வாறான திட்டமொன்றிற்கு ஆதரவு வழங்காமையினால் எம்மை தேசத்துரோகிகள் என்கின்றனர். எனினும் அரசாங்கத்தில் இருக்கின்றவர்கள் சகலரும் தேசப்பற்றாளர்களா? என்பதை நாம் கேட்கின்றோம். அன்று எமது முடிபை ஏலவே தெரியப்படுத்தியிருந்தால் அரசாங்கத்தில் இருக்கின்றவர் களில் எத்தனைபேர் தேசப்பற்றாளர்கள், எத்தனைபேர் தேசத்துரோகி கள் என்பதை கண்டிருக்கலாம்.

எமக்கு தேசப்பற்று குறித்து கற்பிக்க வேண்டிய அவசியம் இல்லை. அது எமது இரத்தத்திலேயே ஊறி இருக்கின்றது. உதவிப்பணத்திற்கும்வரப்பிரசாதங்களுக்கும் அடிபணிந்துநாம் தேசப்பற்றாளர்களாக உருவாக வேண்டிய அவசியம் இல்லை. , (அ-5)

# திஸ்ஸமாராம பகுதி சம்பவங்களுடன் தொடர்புபட்டவர்களை இனங்காணுங்கள்

## தாமதம் இனஒற்றுமையை சீர்குலைக்கும் என்கிறது ஜே.வி.பி.

திஸ்ஸமாராம பகுதியில் அண்மைக்காலமாக இடம்பெற்ற சம்பவங்களுடன் தொடர்புடையவர்கள் யார் என்பதை அரசாங்கம் திட்டவட்டமாக கண்டறிய வேண்டும். இதில் கால தாமதம் ஏற்படும் போது சந்தேகம் வலுப்பெற்று நிலைமை மோசமாகிவிடும் என்று ஜே.வி.பி எம்.பி விஜித்த ஹேரத் தெரிவித்தார்.

சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் யார் என்பதை கண்டறியாத விடத்து பயம். பீதி அதிகரிக்கும்அப்பகுதியில் இனங்களுக்கிடையிலான ஒற்றுமையை சீர்குலைப்பதற்கான முயற்சியும் மேற்கொள்ளப்படுகிறது என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

பாராளுமன்ற கட்டிட தொகுதியில் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். இங்கு அவர் மேலும் கூறியதாவது. திஸ்ஸ மாராம பகுதியில்1955 ஆம் ஆண்டு கிராமசபை தேர்தலில் தமிழர்கள் மூவர் தெரிவு செய்யப்பட்டனர். அதில் ஒருவர்தலைவராகவும் இருந்துள்ளார்.

எனினும் திஸ்ஸமாராம பகுதியில்அண்மைக்காலமாக இடம்பெற்ற சம்பவங்களை அடுத்து அப்பகுதியில் இனங்களுக்கிடையிலான ஒற்றுமையை சீர்குலைப்பதற்கு முயற்சி எடுக்கப்படுகிறது.

எனினும் சம்பவத்துடன் தொடர்புடைய வர்கள் யார் என்பதை அரசாங்கம் இன்னும் கண்டுபிடிக்கவில்லை. சம்பவத் துடன் தொடர்புடையவர்கள் புலி என்று பிரதமரும் . குழுவொன்று தொடர்பு பட்டிருக்கின்றது. என்று அமைச்சர் ஒருவர் கூறும் அதே வேளை , அரசாங்கத்திற்கு விரோதமான குழுவொன்றே இந்த சம்பவங்களுக்கு பின்னனியில் உள்ளது என்று பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது. முன்னுக்குப் பின் முரணான தகவல்களை தெரியப்படுத்துவதனால் பயம் , பீதி அதிகரித்துள்ளது.

உண்மையை கண்டுபிடித்து நாட்டு மக்களுக்கு தெரியப்படுத்த அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும் . சம்பவம் தொடர்பாக 36 நாட்கள் தேடுதல்நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டபோதும் சூத்திரதாரி யார் என்பதை உடனடியாக கண்டுபிடிக்கவில்லை காலதாமதம் போதும். சந்தேகம் வலுப்பெற்று நிலைமைகளை மோசமடையச்செய்யும். (அ-5)

# யாழ்.மத்திய நிலையத்திலிருந்து கடைசி பஸ்கள் புறப்படும் நேரத்தை நீடிக்குமாறு கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ்.மத்திய பஸ் நிலையத்திலிருந்து குடாநாட்டின் பல பகுதிகளுக்குமான கடைசி நேர பஸ் வண்டிகள் புறப்படும் நேரத்தை அதிகரித்து நீடிக்குமாறு பயணிகள் கோரியுள்ளனர். தற்போது குடாநாட்டின் சகல பிரதேசங்களுக்குமான பஸ் போக்குவரத்துச் சேவைகள் தினமும் மாலை 4.30 மணிக்கு நிறைவு பெறுகின்றன.

வடமராட்சி, தென்மராட்சி, வலிகாமம், தீவகம் ஆகிய பெரும் பிரதேசங்களிலிருந்து பல்வேறு தேவைகளின் நிமித்தம் யாழ்.நகரப் பகுதிக்கு வரும் மக்களும், அரசாங்க, தனியார் நிறுவனங்களில் பணியாற்றுவோரும், யாழ்.நகரப் பகுதி, வடமராட்சி, தென்மராட்சி போன்ற பகுதிகளில் இராணுவ வாகனத் தொடரணி போக்குவரத்துக்களின் போது வீதி மூடப்படுவதால் பல மணி நேரம் காத்திருக்க வேண்டிய துர்ப்பாக்கிய நிலை ஏற்பட்டுள்ளது.

மாலை வேளைகளில் இவ்வாறு வீதி மறிப்புகளில் பல மணி நேரம் நின்றுவிட்டு யாழ்.மத்திய பஸ்நிலையத்திற்கு வரும் பயணிகள் அங்கு பஸ் வண்டிகள் இன்மையால் பலத்த சிர மங்களை எதிர்கொள்ள வேண்டியிருப்பதாக சுட்டிக்காட்டப் படு கிறது. இவ்வாறு பஸ் வண்டிகளைத் தவற விடும் சிலர் அதிக பணம் கொடுத்து தனியார் வாகனங்கலை வாடகைக்கு அமர்த் திச் செல்கின்ற போதிலும், கஷ்டப்பட்ட பயணிகள் வாடகை வாகனத்தை அமர்த்திச் செல்ல முடியாத நிலை இருப்பதாகவும் சுட்டிக்காட்டப்படுகிறது.

இதேவேளை யாழ்.மாவட்டத்திலிருந்து வெளிமாவட்டத்துக்கான பயணத்தை மேற்கொண்டுவிட்டு யாழ்.திரும்பும் பயணிகள் காங்கேசன்துறையிலிருந்து யாழ்.மத்திய பஸ் நிலையத்தை வந்தடைய மாலை நேரமாகிவிடும்.

இவ்வாறு வரும் பயணிகளும் தத்தம் வீடுகளுக்கு செல்வதற்கு பஸ் வண்டிகள் இல்லாததால் தனியார் வாகனங்களையே வாடகைக்கு அமர்த்திச் செல்ல வேண்டியிருப்பதாக கவலை தெரிவிக்கின்றனர்.

யாழ்.குடாநாட்டில் கடந்த பல மாதங்களாக ஊரங்குச் சட்டம் தினமும் மாலை 7 மணிக்கு அமுலுக்குக் கொண்டுவரப்பட்ட போதும், யாழ்.மத்திய பஸ் நிலையத்திலிருந்து சகல வழிகளுக்குமான பஸ் போக்குவரத்துச் சேவைகளும் மாலை 4.30 மணியுடன் நிறுத்தப்பட்டு வந்தன.

தற்போது இம்மாதம் 9ஆம் திகதி முதல் ஊரங்குச் சட்டம் இரவு 9 மணிக்கு அமுலுக்கு கொண்டுவரப்படுகின்ற போதும் பஸ் போக்குவரத்துச் சேவைகள் மாலை 4.30 மணியுடனேயே நிறுத்தப்படுகின்றன. ஊரடங்குச் சட்ட நேரத்தில் இரு மணி நேரம் தளர்வு ஏற்படுத்தப்பட்ட பின்னராவது கடைசி பஸ் சேவைகளை ஓரிரு மணித்தியாலங்கள் அதிகரித்து நீடிக்கக் கூடாதா எனப் பயணிகள் வினா எழுப்பியுள்ளனர். (அ-5)

# தமிழர் தாயகப் பகுதிகளில் பணிகள் தொடரும்...

தடையானது எமக்கு அதிர்ச்சியளிக்க வில்லை. 2005 ஆம் ஆண்டு மகிந்த ராஜபக்ஷ ஆட்சிப் பொறுப்பு ஏற்றது முதல் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் அனைத்து மனிதாபிமான, மறுசீரமைப்பு, அபிவிருத்திப் பணிகளைத் தடுக்கவும் முற்றாக நிறுத்தவும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன.

வடக்குக் கிழக்குப் பகுதிகளில் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் மறுவாழ்வு நடவடிக்கைகளுக்குத் தொடர்ச்சியான முட்டுக்கட்டைகள் போடப்பட்டன. அரசாங்கத்தின் வழிகாட்டலின் கீழ் செயற்படும் துணை இராணுவக் குழுவினர் கடந்த 2006 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 7 ஆம் திகதி தமிழர் புனர்வாழ்வுக் கழகப் பணியாளர்களைக் கடத்திச் சென்று பாலியல் வல்லுறவுக்குள்ளாக்கிப் படுகொலை செய்துள்ளனர்.

இலங்கை அரசாங்கக் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் தமிழர் புனர்வாழ்வுக் கழகப் பணியாளர்கள் பலமுறை, துணை இராணுவக் குழுவினராலும் இராணுவச் சீருடையில் வந்தவர்களாலும் தாக்கப்பட்டுள்ளனர்.

யாழ்.மற்றும் மட்டக்களப்புப் புனர்வாழ்வுக் கழக அலுவலகங்கள் சூறையாடப்பட்டு தீக்கிரையாக்கப்பட்டன. வாகனங்களும் அலுவலகப் பொருள்களும் அழிக்கப்பட்டன. மட்டக்களப்பில் தாக்குதலில் எமது பணியாளர் ஒருவர் படுகொலை செய்யப்பட்டார். இவ்வனைத்துமே ஊரடங்குச் சட்ட உத்தரவு அமுலில் இருந்த நேரங்களில் பொலிஸ் மற்றும் இராணுவக் காவலரண்களிலிருந்து 100 அடி தொலைவில் நிகழ்ந்தவையே.

இத்தகைய அச்சுறுத்தல்கள் சித்திரவதைகளுக்கு மத்தியில் அரசாங்கக் கட்டுப்பாட்டு பகுதிகளில் தொடர்ந்தும் நாம் பணியாற்றியுள்ளோம். புனர்வாழ்வுக் கழகத்தின் வங்கிக் கணக்குகளை இலங்கை அரசாங்கம் முடக்கியமையை எதிர்த்து கொழும்பு தலைமை நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்தோம். ஆனால் நீதி மற்றும் சட்டம் ஆகியவை அர்த்தமற்றவை. ஊழலுக்கும் செல்வாக்குக்கும் இடமளிக்கக் கூடியது என்ற வகையில் தீர்ப்பளிக்கப்பட்டது.

எமது வங்கிக் கணக்குகள் முடக்கப்பட்டதைத் தொடர்ந்துஅரசாங்கக் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் 2006 ஆம் ஆண்டு எமது செயற்திட்டங்களை முடிக்காமலேயே வெளியேறும் நிலைக்குத் தள்ளப்பட்டோம்.

1985 ஆம் ஆண்டு தமிழர் புனர்வாழ்வுக் கழகம் ஆரம்பிக்கப்பட்டது. 2002 ஆம் ஆண்டுக்கு முன்னர் வரை வன்னிப் பிரதேசத்தில் தீவிர செயற்பாட்டுடன் இயங்கியது. போர் நிறுத்த ஒப்பந்தத்தின் பின்னர்தான் அனைத்துலக அமைப்புக்களின் உதவியுடன் அனைத்துலக சமூகத்தின் வலியுறுத்தலுக்கு அமைய கொழும்பு சமூக சேவைகள் சட்டத்தின் கீழ் ஒரு அறக்கட்டளையாக பதிவு செய்தோம்.

எமது புனர்வாழ்வுக் கழகத்திற்கு இலங்கை அரசாங்கம் தடை விதித்தாலும் எமது தாயகப் பகுதிகளில் எவரது தடையீடும் இன்றி நாம் தொடர்ந்து இயங்குவோம். ஆழிப் பேரலையாலும் போரினாலும் பாதிக்கப்பட்ட எமது தாயக மக்களுக்குப் பணி செய்யும் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்திற்கு அனைத்துலக சமூகமும் புலம்பெயர் வாழ் தமிழர்களும் தொடர்ந்து ஆதரவளிக்க வேண்டுகிறோம் என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.(எ-5)

# தேசிய ...

விட்டு தேர்தல் ஒன்றை நடத்தி புதிய ஆட்சியினை ஏற்படுத்துவதே நாடு மீட்சி அடைவதற்குள்ள ஒரே வழியாகும் என்றும் அவர் மேலும் கூறினார்.

தேசிய அரசாங்கம் அமைப்பதற்கு ஜனாதிபதி விரும்புவதாகவும் இதற்கு எதிர்க்கட்சி தலைவர் ரணில் விக்கிரமசிங்க முன்வர வேண்டுமென்றும் ஐ.தே.கவின் ஜனநாயகக் குழு உறுப்பினரும் அமைச்சருமான மகிந்த விஜயசேகர கருத்து தெரிவித்துள்ளார்.

இது குறித்து வினவியபோதே ரவி கருணாநாயக்க எம்.பி. மேற்கண்டவாறு கூறினார். இது குறித்து அவர் மேலும் கூறியதாவது,

நாட்டில் தற்போது மக்களின் தன்னாதிக்கத்திற்கு சவால் விடுக்கப்பட்டுள்ளது. ஊழல் மோசடிகள் அதிகரித்து 108 அமைச்சர்களை கொண்டு நடத்த பெரும் தொகைப் பணம் வீணாக்கப்படுகிறது.

மனித உரிமை மீறல்கள அதிகரித்துள்ளன. உண்மையை வெளியிடும் ஊடகங்கள் தீக்கிரையாக்கப்படுகின்றன. இவ்வாறு முழு நாடுமே பாரிய நெருக்கடிக்குள் சிக்கிக் கொண்டுள்ளது. இதனால் அரசாங்கம் தானாகவே கவிழும் நிலை தோன்றியுள்ளது.

அரசாங்கம் செய்ய வேண்டியது என்னவென்றால், மக்களுக்கு தேர்தலொன்றை வழங்கி அவர்களது தன்னாதிக்கத்தை பாதுகாக்கவும் ஆட்சியாளர்களை தெரிவு செய்யும் உரிமையையும் வழங்க வேண்டும்.

உலகிலேயே பாரிய அமைச்சு தொகையான 108 பேரை கொண்டு நடத்தும் செலவை விட தேர்தலொன்றை நடத்த குறைந்தளவு செலவே ஏற்படும் என்றார். (ச-5)

# பொதுநலவாய அமைப்பில்...

மாநாட்டில் இலங்கை வெளி விவகார அமைச்சர் றோகித போகொல்லா கமவும் பங்கேற்று ஒப்புதல் அளித்திருந்தார். பொதுநலவாய அமைப்பின் பொதுச் செயலாளர் டொன் மொக்கின்னோன் அருகில் றோகித போகொல்லாகமதான் அமர்ந்திருந்தார்.

பொதுநலவாய உச்சி மாநாடு நேற்று உகண்டாவில் தொடங்கிய நிலையில் திடீரென இலங்கை அமைச்சரவையின் அவசரக் கூட்டத்தில் பொதுநலவாய அமைப்பின் முடிவை எதிர்ப்பதாகத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

முன்னதாக நாடாளுமன்றத்தில் இது தொடர்பாக பிரதி வெளிவிவகார அமைச்சர் உஷைன் பைலா கூறியதாவது,

பொதுநலவாய அமைப்பு நாடுகளின் பட்டியலிலிருந்து பாகிஸ்தானை நீக்கியதற்கு இலங்கை எதிர்ப்புத் தெரிவிக்க வேண்டும் என்று உகண்டாவிலிருக்கும் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு அமைச்சரவையின் சார்பில் அறிவிக்கப்பட்டிருப்பதாக வெளிநாட்டு பிரதி அமைச்சர் உஷைன் பைலா நேற்று நாடாளுமன்றத்தில் தெரிவித்துள்ளார்.

பொதுநலவாய அமைப்பு நாடுகளின் பட்டியலிலிருந்து பாகிஸ்தானை நீக்குவதற்கு ஆதரவாக அமைச்சர் றோகித போகொல்லாகம வாக்களித்திருந்தார். ஆனால் இது சரியான முடிவல்ல. இதனால் பிரதமர் ரட்னசிறி தலைமையில் சிறப்பு அமைச்சரவையைக் கூட்டி பாகிஸ்தானுக்கு ஆதரவு தெரிவிக்குமாறு மகிந்த ராஜபக்ஷவுக்குத் தெரிவிக்கத் தீர்மானித்திருக்கின்றோம் என்றார். (எ-5)

# பேசாலைக் கடற்பரப்பில்...

பின்வாங்கினர்.

படையினரின் நடவடிக்கையை முறியடித்து கடற்படைக்குச் சேதங்களை ஏற்படுத்திய கடற்புலிகள் அணி திரும்பும் போது பேசாலைக் கட்ற்படைத் தளம் மற்றும் நிலைகள் மீது பீரங்கித் தாக்குதலையும் நடத்தியுள்ளனர்.

கடற்புலிகளின் பீரங்கிக் குண்டுகள் கடற்படைத் தளத்திற்குள் வீழ்ந்து வெடித்து சேதங்கள் ஏற்படுத்தியுள்ளன. இம்முறியடிப்புத் தாக்குதலில் கடற்புலிகளுக்கு எவ்வித சேதமும் ஏற்படவில்லை என விடுதலைப்புலிகள் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை கடற்படையினருக்கும் கடற்புலிகளுக்குமிடையில் நேற்று இடம்பெற்ற மோதல் ஒன்றின்போது 17 கடற்புலிகள் பலியானதாகவும் 7 படகுகள் சேதமடைந்துள்ளதாகவும் தேசிய பாதுகாப்புக்கான ஊடக மையம் தெரிவித்துள்ளது.

பேசாலை உப பொலிஸ் நிலையம் மீது நேற்றுக் காலை 8 மணியளவில் புலிகள் தாக்குதல் ஒன்றை மேற்கொண்டனர். தரை வழியாக தாக்குதல் நடத்த் வந்த புலி உறுப்பினர்களுக்கு ஆதரவு வழங்கும் வகையில் கடற்புலிகளும் அங்கு வந்துள்ளனர்.

இதன்போது பொலிஸார் பதில் தாக்குதலில் ஈடுபட்டனர். இத் தாக்குதலில் புலிகளின் படகு ஒன்று சேதமடைந்ததையடுத்து அதை எடுத்துக் கொண்டு மற்றொரு படகு தப்பிச் சென்றுள்ளது.

இதனைத் தொடர்ந்து கடற்படையினர் கடற்பரப்பில் தேடுதல் நடவடிக்கை ஒன்றில் ஈடுபட்டனர். அப்போது படகில் வந்த கடற்புலிகள் மீது கடற்படையினர் தாக்குதல் நடத்தினர்.

இதனையடுத்துப் புலிகளின் படகுகள் விடத்தல் தீவுக்குத் தப்பிச் சென்றுள்ளன. மேற்படி தாக்குதலின்போது 17 கடற்புலிகள் கொல்லப்பட்டதோடு அவர்களின் 7 படகுகள் சேதமடைந்துள்ளன என ஊடக மத்திய நிலையம் தெரிவித்துள்ளது. (எ-5)

# பேசாலை மக்கள்...

அடிகளார் தெரிவித்தார். இது குறித்து அவர் கூறியுள்ளதாவது,

கடற்றொழிலாளர்கள் கடலிலிருந்து தரை திரும்பிக் கொண்டிருந்தபோது நேற்றுக் காலை 7.30 மணியளவில் கடற்பகுதியில் குண்டுச் சத்தங்கள் கேட்டன. இதனையடுத்துக் கடலைநோக்கி கரையிலிருந்தும் தாக்குதல்கள் நடத்தப்பட்டன.

கரையோரப் பகுதி மக்கள் இதனால் பதறியடித்துக் கொண்டு ஓடி தேவாலயத்திற்குள் தஞ்சமடைந்துள்ளனர். சிறுதோப்பு, வங்காலைப்பாடு ஆகிய கடற்கரைகளிலிருந்த சுமார் 400 பேர் வரை பிரதான வீதியைக் கடந்து தேவாலயத்திற்கு வந்துள்ளனர்.

இப்படியான சம்பவங்கள் நிகழும்போது தேவாலயத்தில் மக்கள் தஞ்சமடைவது வழக்கமாகும். எறிகணைகள் மக்கள் குடியிருப்பு பகுதியில் வீழ்ந்து வெடித்ததாக மக்கள் தெரிவித்தனர். ஆனால் இதுவரை நாம் அப்பகுதிக்குச்செல்லவில்லை. சம்பவத்தில் எவருக்கும் பாதிப்பு ஏற்பட்டதாக இதுவரை தகவல்கள் கிடைக்கவில்லை என்றார். (ச-5)

# யுனிசெவ்வின் சர்வதேசப் பணியாளரை...

அழைத்து வெளிவிவகார அமைச்சின் பிரதிச் செயலாளர் தெரிவித்தார்.

அத்தகைய நடவடிக்கையானது யுனிசெவ் அமைப்பின் சட்டபூர்வமான செயற்பாடுகளுக்கு அப்பாற்பட்டதாகும். ஆகையால் கொழும்பில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்ட அனைத்துலகப் பணியாளரை திரும்பப் பெற வேண்டும் என்றும் உள்நாட்டுப் பணியாளர்களைப் பணி நீக்கம் செய்ய வேண்டும் என்றும் வெளிவிவகார அமைச்சின் செயலாளர் வேண்டுகோள் விடுத்தார்.

கொழும்பில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் தமது பணியாளர்கள் பங்கேற்றதை யுனிசெவ் வதிவிடப் பிரதிநிதி ஒப்புக் கொண்டார். இத்தகைய நிகழ்வுகள் எதிர்காலத்தில் நடைபெறாது என்றும் உறுதியளித்தார். இது தொடர்பில் ஐ.நாவின் மனித வளங்கள் பிரிவின் சார்பில் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் அது குறித்த தகவல்களை வெளிவிவகார அமைச்சுக்கும் தெரிவிப்பதாகவும் யுனிசெவ் வதிவிட பிரதிநிதி கூறினார்.

மனிதாபிமானப் பணியாளர்கள் பணிபுரிவதற்கு இலங்கையில் பாதுகாப்பு இல்லாத நிலைமை இருப்பதாக இந்த வாரத்தின் தொடக்கத்தில் யுனிசெவ் அமைப்புத் தெரிவித்திருந்தது. யுனிசெவ் அமைப்பின் கவலையை உறுதி செய்து கொண்ட பிரதிச் செயலாளர் அது தொடர்பில் உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்றும் கூறினார்.

தமிழர் புனர்வாழ்வுக் கழகத்திற்கும் யுனிசெவ் அமைப்புக்கும் சட்டவிரோத பரிவர்த்தனைகளுக்கான சான்றுகள் எதுவும் இல்லை என்றும் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் பணித் திட்டங்களில் யுனிசெவ் அமைப்பின் சட்டவிரோத ஈடுபாடு குறித்து வெளிப்படையாக முழு அளவிலான தணிக்கையை ஐ.நா. தலைமையகம் மேற்கொள்ளும் என்றும் யுனிசெவ் வதிவிடப் பிரதிநிதி தெரிவித்தார்.

அத்தகவல்கள் அரசாங்கத்திற்கும் தெரிவிக்கப்படும் என்றும் அவர் கூறினார் என்று வெளிவிவகார அமைச்சின் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

செஞ்சிலுவைச் சங்கப் பணியாளர்கள் இருவர் கொழும்பில் படுகொலை செய்யப்பட்டதைக் கண்டித்து ஜூலை மாதம் உள்ளூர் மனித உரிமைகள் அமைப்பு அமைதியான முறையில் ஏற்பாடு செய்திருந்த ஆர்ப்பாட்டத்தில் யுனிசெவ் பணியாளர்கள் பங்கேற்றிருந்தனர் என்று தற்போது மூன்று மாதங்களுக்குப் பின்னர் அரசாங்கம் குற்றஞ்சாட்டி நடவடிக்கை எடுக்க வலியுறுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (எ-5)

# தமிழ்க் கூட்டமைப்பு எம்.பிக்கள்...

அவர் மேலும் கூறியதாவது, தமிழ் மக்களின் பிரச்சினைக்கு சுயநிர்ணய அடிப்படையிலான தீர்வு ஒன்றே வேண்டும். ஆனால் மகிந்த அரசாங்கத்திடம் இனப்பிரச்சினையைத் தீர்த்து வைப்பதற்கான எந்தவித திட்டமும் இல்லை. அத்தகைய தீர்வை மகிந்த ராஜபக்ஷ அரசாங்கம் கொண்டு வரும் என்றும் நாங்கள் நம்பவில்லை.

இந்தக் காரணத்தினால்தான் வரவு-செலவுத் திட்ட வாக்கெடுப்பில் அரசாங்கத்திற்கு எதிராக வாக்களித்தோம். நாங்கள் வரவு-செலவுத் திட்டத்தை எதிர்த்தது மற்ற எந்தக் கட்சிகளையும் ஆதரிக்க வேண்டும் என்பதற்கல்ல.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் வரவு-செலவுத் திட்டத்திற்கு ஆதரவாக வாக்களிக்க வேண்டும் என்பதற்காக நாடாளுமன்ற உறுப்பினர் கனகசபையின் மருமகன் துணை இராணுவக் குழுவினரால் வீடு புகுந்து 'கடத்திச் செல்லப்பட்டார். அதன் பின்னர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் மிரட்டப்பட்டார்கள்.

வரவு-செலவுத் திட்டத்தில் அரசாங்கம் வெற்றி பெற்றதும் தாங்கள் கடத்தியவரை பொலிஸ் நிலையத்தில் கொண்டுபோய் அவர்கள் விட்டுள்ளனர். பொலிஸார் அவரை வீட்டுக்கு அனுப்பியுள்ளனர்.

இதன்மூலம் துணை இராணுவக் குழுவினருக்கும் மகிந்த ராஜபக்ஷ அரசாங்கத்திற்கும் இடையிலான தொடர்பு வெட்ட வெளிச்சமாகியுள்ளது. ஆயுதக் குழுக்களுக்கும் பாதுகாப்புத் தரப்பினருக்கும் தொடர்புண்டு என்பது நிரூபணமாகின்றது.

அரசாங்கத்திற்கு இவை தெரியும். அது மட்டுமல்ல. தங்கேஸ்வரி, அரியநேந்திரன் ஆகியோரின் வீடுகளுக்குப் போடப்பட்டிருந்த பாதுகாப்பை விலக்கியுள்ளனர். யார் இந்தப் பாதுகாப்பை விலக்குமாறு உத்தரவிட்டது? அரசுக்குத் தெரியாமல் பாதுகாப்பு விலக்கப்படவில்லை. எனவே இந்தச் சம்பவத்தை அரசு மூடி மறைத்துவிட முடியாது.

மகிந்த ராஜபக்ஷ அரசாங்கத்தின் இத்தகைய நாகரிகமற்ற செயற்பாடுகள் நாளை ஏனைய நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் நிகழலாம். எனவே அதற்குச் சரியான நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்.

அனைத்துலக சமூகம் இதில் தலையிட்டு சரியான நடவடிக்கையை எடுக்க வேண்டும் என்றார் அவர்.

த.தே.கூவின் யாழ்.மாவட்ட நாடாளு மன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரன் கூறியதாவது,

தமிழ்த் தேசியக்கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு ஏற்பட்டுள்ள அபாய நிலை குறித்து அனைத்துலகசமூகம் கவனம் செலுத்த வேண்டும்.

வரவு-செலவுத் திட்டத்தின் அடுத்த கட்ட வாக்கெடுப்பு நாளான டிசம்பர் 14 ஆம் திகதி அல்லது அதற்கு முன்பாகவோ நாடாளுமன்ற உறுப்பினர்கள் கடத்தப்படும் நிலை உருவாகியிருக்கின்றது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் மட்டுமல்ல; ஏனையவர்களும் கடத்தப்படலாம். இதற்கு அனைத்துலகம் சரியான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். இப்போது நடவடிக்கை எடுக்காதுவிடின் இனி எப்போதுமே அவர்கள் நடவடிக்கை எடுக்கக் கூடாது. மௌனமாகவே இருந்துவிட்டு அவர்கள் போகலாம்.

யாழ்ப்பாணம் இன்று திறந்தவெளிச் சிறைச்சாலையாகவும் மனித உரிமை மீறல்கள் மலிந்த இடமாகவும் மாறிவிட்டது. கடந்த ஒரு மாதத்தில் மட்டும் யாழ்ப்பாணத்தில் 56 பேர் படுகொலை செய்யப்பட்டுள்ளனர். இதைவிட கடத்தல், கப்பம் பெறுதல், காணாமல் போகச் செய்தல் போன்ற சம்பவங்களும் அதிகரித்துள்ளன.

நாங்கள் தங்கியிருக்கும் மாதிவெல நாடாளுமன்றக் கட்டடத் தொகுதிக்குள் எமது பாதுகாவலர்கள் ஆயுதம் வைத்திருக்க தடை விதிக்கப்பட்டுள்ளது. இது குறித்து மகிந்த ராஜபக்ஷவுக்கும் சபாநாயகருக்கும் தெரியப்படுத்தியிருக்கின்றோம் என்றார்.

இந்த மாநாட்டில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களான மாவை.சேனாதிராஜா, செல்வம் அடைக்கலநாதன், தங்கேஸ்வரி கதிர்காமர், ஜெயானந்தமூர்த்தி, சிவாஜிலிங்கம், சிறிகாந்தா, துரைரட்ணசிங்கம், சிவசக்தி ஆனந்தன், விணோதராதலிங்கம், சந்திரநேரு சந்திரகாந்தன், பத்மநாதன், கனகசபை ஆகியோர் பங்கேற்றனர். (ச-5)

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3 இரண்டாம் ஒழுங்கை பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில 24.11.2007 இல் அச்சிட்டுவெளியிடப்பட்டது.